பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 20 | வெள்ளிக்கிழமை | 05.01.2024 | கதிர் 420

# வடக்கின் மேம்பாட்டுத் திட்டத்தினை தயாரித்து நாட்டின் துரித அபிவிருத்தியில் இணையுங்கள்

## தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு





வட. மாகாண அபிவிருத்திக்கு அவசியமான திட்டத்தைத் தயாரித்து துரித அபிவிருத்திக்கான பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு வடக்கு மாகாணத்தின் மக்கள் பிரதி ☞2



## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதிரணிலின்யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழுக்கூ-ட்டத்தை தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் புறக்கணித்தனர். அவர்கள் புறக்கணித்தனர் என்று சொல்லமுடியுமா என்று தெரியவில்லை. ஏனெனில் புறப்பணிப்பதாக அவர்கள் அறிவிக்கவில்லை. ஆனால், அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின்இணைத்தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்ததார்த்தனும் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதனும் மட்டுமே கூட்டத்தில்கலந்துகொண்டிருந்தனர். தமிழ் அரசுக் கட்சியிலிருந்து ☞2

## எந்த தேர்தலுக்கும் பெரமுன தயாராம்

நாடாளுமன்றத்தைக்கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுள்ள நிலையில் நாம் எந்தத் தேர்லையும் முகங்கொடுப்பதற்குதயாராகவுள்ளோம் என்று பொது ஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர்நாமல்ராஜபக்ஷதெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றை அடுத்து செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞2

# ரணிலின் யாழ். வருகையை எதிர்த்து மாவட்ட செயலகம் அருகே போராட்டம்

## நான்கு பேர் கைதாகினர்





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப் பாணத்திற்கு வந்திருப்பதற்குஎதிர்ப்புத்தெரிவித்து யாழ்ப்பாணம்மாவட்டச் செயலகம்அருகேபழைய பூங்காவையொட்டி நேற்றுப் ☞9

# ஜனாதிபதித் தேர்தலே முதலில் ஐ.தே.க. உப தலைவர் கருத்து

ஜனாதிபதி தேர்தலே முதலில் நடைபெறும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ்காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் முன்னதாகவே கலைக்கப்படுமா என்பது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நிறைவடைவதற்கு இன்னமும் காலம் இருக்கின்றது. ஆகவே அதனை முற்கூட்டியே கலைக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை.

தற்போதைய சூழலில் அரசியலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு முன்னதாக நடைபெறும். அதற்கான செயற்பாடுகளை நாம் முன்னெடுக்கவுள்ளோம். ஆகவே வீணான குழப்பங்களை அடைய வேண்டியதில்லை என்றார்.

# நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் ஜனவரி 21இல் நாடாளுமன்றில்

## சமர்ப்பிக்கப்படும் என்கிறார் அமைச்சர்

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை ஜனவரி 23 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

கொழும்பில்நேற்றையதினம் புதிய பொலிஸ் பிரிவொன்றைஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் உள்ள சிறுவர்கள் மற்றும் பெண்களைப் பாதுகாக்க வேண்டும். இந்த நாட்டின் பிள்ளைகளை பாதுகாப்பதற்காகவே யுக்திய நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. அதற்காகவேஅந்நடவடிக்கையை தொடர்ச்சியாக முன்னெடுக்கத் தீர்மா னித்துள்ளதாக கூறியுள்ளோம்.

போதைப்பொருட்களுடன் தொடர்புடைய எந்தவொரு தரப்பினருக்கும் நாம் ☞2

# பெப்ரவரி முற்பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல்

## நளின் பண்டார எம்.பி. எதிர்வுகூறல்

எதிர்வரும் பெப்ரவரி மாத முதற்பகுதியில் பொதுத்தேர்தல் நடத்தப்படுமென எதிர்பார்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களுடன் நடந்த சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிற்க ஒக்டோபரில் ஜனாதிபதி தேர்தலை ☞2

# ஆயுர்வேத மருந்துகளுக்கு 'வற்' விலக்களிக்க தீர்மானம்

சுகாதாரச்செலவைக் குறைக்கும் வகையில், ஆயுர்வேத உற்பத்திகள், மருந்துகள்மற்றும்சுதேச மருத்துவம் தொடர்பான தொழில்துறைகளுக்கு வற் வரியில் இருந்து விலக்களிக்க ஆளும் தரப்புத் தீர்மானித்திருப்பதாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்சிசிரஜயகொடி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரைநாம்சுதேச மருத்துவத்துறையில்பல சிறந்த சாதனைகளைப் படைத்துள்ளோம். ஆயுர்வேத உற்பத்திகள், மருந்துகள்மற்றும்சுதேச மருத்துவம் தொடர்பான தொழில்துறைகளுக்கு வற் வரியில் இருந்து விலக்களிக்கஅரசாங்கம் தீர்மானித்துள்ளது. ☞8

# செயற்கைக் கால்களை வழங்கிய அமைச்சர்



போரினால் கால்களைஇழந்தவர்களுக்கு ஜனாதிபதியின்எண்ணக் கருவிற்கு அமைவாக நல்லெண்ணஅடிப்படையில் அமைச்சர் பந்துல குணவர்ததன செயற்கைக் கால்களை நேற்றுவழங்கிவைத்தார்.

மாவட்ட செயலர் களின ஊடாக முன் மொழியப்பட்ட ☞2

# பீடித் தொழிற்சாலைகளின் பிரச்சினைகள் பற்றி ஆய்வு

பீடிதொழிற்சாலைகள் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் தொடர் பிலான கலந்துரையாடலொன்றுநேற்று ஜனாதிபதிஅலுவலகத்தில் நடைபெற்றது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய,தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோர் தலைமையில் மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது.

பீடி தொழிற்சாலைகளுக்கு அவசியமான மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் போதான பிரச்சினைகள் மற்றும் மோசடிகள் தொடர்பில் தீர்க்கமாக ஆராயப்பட்டது.

அதற்கமைய பீடி தொழிற்சாலைக ளுக்கான மூலப்பொருட்கள் இறக்குமதி தொடர் பிலான வரி ☞9

# உண்மைக்கும் நீதிக்குமான அலுவலகம் தொடர்பில் திருமலையில் கலந்தாய்வு

உண்மைக்கும் நீதிக்கும் நல்லிணக்கத்துமான அலுவலக பொறிமுறையை ஸ்தாபிப்பதற்கானகுழுவின்உறுப்பினர்கள் திருகோணமலை மாவட்டத்திற்குச் பயணம்செய்து மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி, மறைமாவட்ட ஆயர் கிறிஸ்டி நோயல் இமானுவல் ஆகியோரைச்சந்தித்து கலந்துரையாடினாகள்.

உண்மைக்கும் நீதிக்கும் நல்லிணக்கத்துமான அலுவலக பொறிமுறையைஸ்தாபிப்பதற்கான குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான யுவி.தங்கராஜா இந்தப் பயணம் குறித்துத் தெரிவித்ததாவது:

அரசு தற்போது உண்மைக்கும்நீதிக்கும் நல்லிணக்கத்துமான அலுவலகத்தினை அமைப்பதற்கான ☞9

# தனிநபர் மருத்துவச் செலவுக்கான ஜனாதிபதி நிதி உதவி அதிகரிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின்பணிப்புரைக்கு அமைவாக ஜனாதிபதிநிதியத்தினால் தற்போது வழங்கப்படும் மருத்துவ உதவிக் கொடுப்பனவுகளை 2024 ஜனவரி 1 முதல் 50 சதவீதத்திலிருந்து நூறு சதவீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன்2024ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியின் ☞2

## இனி இது .....

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் கலந்துகொண்டிருந்தார். யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன், கே.கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எஸ்.கஜேந்திரன், க.வி.வின்னேஸ்வரன் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இவர்களில் விக்னேஸ்வரன் மட்டும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை என்பதை முன்கூட்டியே அறிவித்திருந்தார். அரசமைப்பின்13ஆவதுதிருத்தத்தை நடைமுறைப்படுத்துவதுதொடர்பான விடயத்தில் ஜனாதிபதி அவரை நம்பவைத்துஏமாற்றிவிட்டதால்அவர் கூட்டத்தில்கலந்துகொள்ளவில்லை. தீர்வு விடயத்தில் ரணில் காட்டும் புறக்கணிப்புக்குஎதிர்ப்புத்தெரிவித்து தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்கலந்துகொள்ளாமல் இருந்திருக்கக்கூடும். முன்னணி எப்போதுமே ரணிலை எதிர்ப்பதன் காரணமாக பங்கேற்றிருக்காது.

ஆனால், ஜனநாயகக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரன் தொடர்ச்சியாக ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்து விமர்சித்து அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றார். அண்மையில்கூட, நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் ஒருவருடத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று ஜனாதிபதி அறிவித்ததற்குக் கடுமையான விமர்சனங்களையும் தெரிவித்திருந்தார். அது தொடர்பில் பல அறிக்கைகளையும்விடுத்திருந்தார். அப்படியிருந்தும் அந்தக் கூட்டணியின்நாடாளுமன்ற உறுப்பினரான சித்தார்த்தன் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

ஜனாதிபதியின் இதுபோன்ற கூட்டங்களில் கலந்துகொள்வதா இல்லையா என்பது தொடர்பில் ஜனநாயகக் கூட்டணி ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. முன்னர் இதுபோன்றவிடயங்களில்கூட்டமைப்புக்குள் தமிழ் அரசுக் கட்சியினர் மற்றையவர்களுடன்கலந்தாலோசிக்காமல்தம்பாட்டில்நடந்துகொள்கிறார்கள்என்றுகோள்எடுத்துக்கொண்டிருந்தவர்கள்தான் இப்போது ஜனநாயகக் கூட்டணியாக ஒன்றிணைந்திருக்கிறார்கள். ஆனால், ரணிலின் கூட்டத்தில் கலந்துகொள்வதா, அதுவும்இந்ததற்போதையஅரசியல் நிலையில்கலந்துகொள்வதாஎன்பது தொடர்பில் கூடி ஆராய்வதற்கான தேவை எதுவும் இருந்ததாக அவர்களுக்குப்படவில்லை என்பது இங்குகூர்ந்துகவனிக்கவேண்டியது.

அண்மையில்யாழ்ப்பாணத்தில் இந்தக் கூட்டணியினரின் கூட்டம் ஒன்று நடைபெற்றிருந்தது. தேர்தல் நெருங்கி வருவதால் கூட்டணியின்ம மாவட்டப் பிரதிநிதிகளை நியமிப்பதற்காக இந்தக் கூட்டம்நடத்தப்பட்டிருந்தது. உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்புமனு கோரப்பட்டபோது இந்த ஜனநாயகக் கூட்டணி அமைக்கப்பட்டது. இப்போது அடுத்த தேர்தல் நெருங்குவதையொட்டி மாவட்டப்பிரதிநிதிகளைநியமிக்கும் கூ-ட்டத்தை நடத்தியிருந்தார்கள். ஆனால், அந்தக் கூட்டத்தில்கூட ஜனாதிபதியின் யாழ்ப்பாண வருகையையொட்டிய அரசியல் முடிவுகள் குறித்து இந்தக் கூட்டணியினர்ஆராயவேயில்லை.

இவர்கள்தான் தமிழ் மக்களின் அரசியல் முடிவுகள் குறித்து அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்துசெயற்படவேண்டும், ஓரணியில் செயற்படவேண்டும் என்றுதொடர்ந்துகருத்துத்தெரிவித்து வருகின்றார்கள்.

இடிமின்னல்

(idiminnal@gmail.com)

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதிகள் அனைவருக்கும் அழைப்பு விடுத்த ஜனாதிபதி,

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.







நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுளனர் என தான் அறிந்துள்ளார் எனவும், இம்முறை தைப்பொங்கல் கொண்டாட்டத்தின் பின்னர் அரச ஊழியர்களுக்கு ஓரளவான பொருளாதார நிவாரணங்கள் கிடைக்கப்பெறும்என்றும்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்திய பின்னர் மக்களுக்கு பொருளாதார நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்த்திருத்தின் காரணமாக நிலுவையிலிருந்து அனைத்து பத்திரங்களும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன என்றும், அடுத்த நான்கு காலாண்டுகளில்பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேபோல், இவ்வருட இறுதிக்குள் பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3 சதவீதமாக மேம்படுத்தவும்,2025ஆம்ஆண்டில் 5 சதவீதமாக அதிகரித்துக்கொள்ள திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியமர்த்தும்பணிகள்முழுமையாக நிறைவு செய்யப்பட வேண்டும் என வட. மாகாண அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தினார்.

2025ஆம் ஆண்டளவில் இடம்பெயர்ந்தவர்கள் என எவரும் இலங்கைக்குள் இருக்கக் கூடாதெனவும், அவர்களுக்கு அவசியமான வசதிகளை பெற்றுக்கொடுத்து அவர்களின் உயிர்வாழும் உரிமையை உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 1788 பேர் காணாமல் போயிருப்பதாக பதிவு செய்யப்பட்டிருப்பதோடு அவற்றில் 1289 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 500க்கு கிட்டிய முறைப்பாடுகளை விரைவில் விசாரணை செய்யுமாறு அதிகாரிக்களுக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி அடுத்த ஆறு மாதங்களுக்குள் அந்த பணிகளை நிறைவுசெய்துகாணாமல்போனோர் அலுவலகத்துடன் தொடர்புபட்டு செயற்படுமாறும் அறிவுறுத்தினார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அரசியல் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் ஒன்றுகூடியிருந்த மேற்படிகூட்டத்தில்மாவட்டத்திற்குள் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டிருக்கும் திட்டங்கள் மற்றும் அது தொடர்பில் எழுந்திருக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மீள் குடியமர்த்தல், கல்வி, சுகாதாரம், காணி, மீன்பிடி, விவசாயம் மற்றும் வனப் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகள் தொடர்பிலும்வழக்கின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது விசேட கவனம் செலுத்தினார்.

வட. மாகாண அபிவிருத்திக்கு அவசியமானதிட்டத்தைத்தயாரித்து துரிதஅபிவிருத்திக்கானபயணத்தில் இணைந்துகொள்ளுமாறு வடக்கு மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் அழைப்பு விடுத்த ஜனாதிபதி,நாட்டின்பொருளதாரத்தை மீட்கும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும்வலியுறுத்தினார்.

புதியபொருளாதாரஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் எவர் வேண்டுமானாலும் நாட்டுக்குள் முதலீடுகளைப் மேற்கொள்ள முடியும்என்றும்,வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளவர்களுக்கு அதற்கான அழைப்பை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கின் வலுசக்தியைப் பாதுகாத்து வலுசக்தி ஏற்றுமதி செய்வதற்கு அவசியமான அனைத்துத் திட்டமிடல்களும் காணப்படுவதாகவும் பூநகரியை வலுசக்தி கேந்திர நிலையமாக மாற்றுவதாகவும் உறுதியளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, வடக்கின் விவசாயத்துறையை விவசாய நவீனமயப்படுத்தலுக்குள் உள்வாங்கி அதிலிருந்து பெறப்படும் பலன்களை இரட்டிப்பாக்கிகொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் காணி விடுப்புசெயற்பாடுகளைதுரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி பலாலி விமானநிலையம்மற்றும்பாதுகாப்பு துறைக்கு தேவையான காணிகள் தொடர்பில் பெப்ரவரி மாதமளவில் இறுதித்தீர்மானத்தைஎடுப்பதாகவும் அறிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்குசென்றுகாணி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

வடக்கின்குடிநீர்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்கான இரு திட்டங்களுக்கு இம்முறை வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் திட்டங்களுக்கு செலுத்தப்பட வேண்டியிருந்தகொடுப்பனவுகளை பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, மீன்பிடித்துறை அமைச்சர் டக்லஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பீ.எம்.எஸ்.சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் ராமநாதன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வடக்கு மாகாணத்துக்கான ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் எம்.இளங்கோவன், ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, ஜனாதிபதியின் சமூக அலுவல்கள் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அம்பலவானன் சிவபாலசுந்தரன், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபாவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

## செயற்கைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கால்களை இழந்த 101 மாற்றுதிறானளிகளுக்கு கால்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்த்தன, வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ், மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உட்பட்ட பலர் கலந்துகொண்டனர்.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னிப்பளிக்கப்போவதில்லை. 2023ஆம் ஆண்டில் 8ஆயிரம் முறைப்பாடுகள்உள்ளன. அவற்றில் 3ஆயிரம் முறைப்பாடுகள் சமூக ஊடகங்கள் தொடர்பில் உள்ளன.

இதன்காரணமாகவேநிகழ்நிலை காப்புச்சட்டமூலத்தினைக்கொண்டு வருகின்றோம். ஆனால் சர்வதேச அமைப்புக்களில் உள்ளவர்கள், தூதரகங்களில் உள்ளவர்கள் என்னைத் தொடர்பு கொண்டு இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார்கள்.

இன்று(நேற்று) காலையும் தூதுவர் ஒருவர் என்னைத் தொடர்பு கொண்டார். நிகழ்நிலை காப்புச்சட்டத்தினை ஏதோவொரு வகையில் நிறுத்துமாறு கூறினார். அவர்களுக்கு நான் தெளிவு படுத்தியுள்ளேன்.

நான் இந்தச் சட்டமூலத்தினை அமுலாக்குவதை நிறுத்தப் போவதில்லை.நான்ஜனவரி23ஆம் திகதி இந்தச் சட்டமூலத்தினைக் கொண்டுவரவுள்ளேன். அவர்களின் யோசனைகளைஎதிர்வரும்எட்டாம் திகதி முன்வைக்க முடியும்.

அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்க முடியுமா என்பதை பற்றி ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும். நாம் அனைவரும் நாட்டின் பெண்கள், சிறுவர்களை பாதுகாப்பதற்காக சிந்திக்க வேண்டும். அதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது.

## எந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தினைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. ஆகவே அவர்முதலில்ஜனாதிபதித்தேர்தலை நடத்த வேண்டுமா இல்லை நாடாளுமன்ற தேர்தலை நடத்த வேண்டுமாஎன்பதைத்தீர்மானிக்க வேண்டும்.

அவருடைய தீர்மானத்துக்கு அமைவாகஅறிவிப்புவெளியாகுவதே பொருத்தமானது. ஏனென்றால் அவரே அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றார். எம்மைப் பொறுத்தவரையில் கட்சி என்ற அடிப்படையில் நாம் எந்தத் தேர்தலையும் முகங்கொடுப்பதற்கு தயாராகவே உள்ளோம் என்றார்.

## பெப்ரவரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்குமுன்னதாகஎதிர்வரும் பெப்ரவரியில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

வரலாறு முழுவதும் அவர் தரவுகளின் அடிப்படையில் எவ்வாறு தீர்மானங்களை எடுத்தாரோ அதேபோன்று தான் தற்போதும் பொதுத்தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தினை எடுத்துள்ளதாக சமிக்ஞைகள் கிடைகிக்கின்றன. நாம் எந்தத் தேர்தலை முகங்கொடுப்பதற்கும் தயாராகவே உள்ளோம் என்றார்.

## தனிநபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிகாட்டுதலுக்குஅமையஜனாதிபதி நிதியத்தின்மூலம்பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத்குமார தெரிவித்தார்.

இதன்படி, இதுவரை மருத்துவ உதவி வழங்கப்படாத நோய்கள் கண்டறியப்பட்டு, அந்த நோய்களுக்கான மருத்துவ உதவிகள்வழங்கும்பணிஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல், 21வயதுக்குட்பட்டவர்களுக்கு, தனியார் அல்லது அரை அரசு மருத்துவமனைகளில் கண் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு மருத்துவ உதவி வழங்கப்படும்.

நோய்வாய்ப்பட்டவர்கள் மருத்துவ உதவி பெறுவதற்காக நகரத்திற்கு வருவதைக் குறைப்பதற்காக, நாடளாவிய ரீதியில்உள்ளவைத்தியசாலைகளின் ஜனாதிபதி நிதியத்தில் இலகுவாகப் பதிவு செய்யும் முறையும் 2024ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கராபிட்டியவைத்தியசாலையில் வேலை நேரத்தின் பின்னர் இருதய சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்காகவழங்கப்படும் கொடுப்பனவு இந்த வருடம் முதல் அதிகரிக்கப்படவுள்ளதுடன்ஏனைய வைத்தியசாலைகளுக்கும் இந்த முறையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல் ராகம வைத்தியசாலையில் சிறு குழந்தைகளுக்கான கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சைகளுக்காக ஒரு மில்லியன் ரூபா வரையான மருத்துவ உதவி தொகையும் வழங்கப்படும். மேலும், தனியார் அல்லது அரை அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு இது வரை மருத்துவ உதவி வழங்கப்படாததோடு அதற்கான மருத்துவ உதவி இந்த ஆண்டு முதல் வழங்கப்படும்.

தனியார் அல்லது அரை அரசு மருத்துவமனைகள் தவிர, அரசு மருத்துவமனைகளும் இந்த ஆண்டு முதல் எலும்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்பும் பின்பும் வெளியில் செய்யப்படும் மருத்துவப் பரிசோதனைகளுக்கு இந்த ஆண்டு முதல் மருத்துவ உதவி வழங்கப்படும்.

மருத்துவ உதவிகளை வழங்குவதில் நோயாளர்களின் குடும்ப அலகு ஒன்றின் மாதாந்த வருமான வரம்பான 150,000 ரூபாவை இந்த வருடம் முதல் 02 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.இதன்மூலம்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# யுக்திய நடவடிக்கையால் தாய், தந்தையர் கைது பிள்ளைகள் பாதள உலகுடன் இணையும் ஆபத்து

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை



ஆளும்தரப்பின்யுக்தியநடவடிக்கையால் சிறுவர்கள் பாதள உலகத்தினருடன் இணையும் நிலையேற்பட்டுள்ளது என நாடாளுமன்றஉறுப்பினர்சம்பிக்கரணவக்க தெரிவித்துள்ளார்.

யுக்திய நடவடிக்கையின் போது தாயும் தந்தையும் கைதுசெய்யப்படுகின்றனர். இதனால்வீடுகளில்தனித்திருக்கும்சிறுவர்கள் பாதள உலகத்தினருடன் இணையும் ஆபத்துள்ளது எனத் தெரிவித்துள்ள அவர் பெண்கள் பாலியலில் ஈடுபடும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் அவர்களின் பிள்ளைகள் தனித்துவிடப்பட்டுள்ளனர் உணவையோ பாதுகாப்பையோ பெற முடியாத நிலையில் உள்ளனர் எனத் தெரிவித்துள்ள சம்பிக்க ரணவக்க இந்த பிள்ளைகளிடம் தங்கள் பெற்றோருக்காக வாதாட சட்டத்தரணிகளை அமர்த்தும் வலுவோ பணமோ இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள பெரும்முதலைகள் கைப்பற்றப்பட்டுள்ளனர்என்பதுகுறித்ததகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனசம்பிக்கரணவக்கதெரிவித்துள்ளார்.

கடற்கரையோரங்களில் உள்ள ஹோட்டல்களை பொலிஸார் புல்டோசர்களை பயன்படுத்தி அழித்ததை நாங்கள்பார்த்துள்ளோம்கடற்கரையோரத்தில் உள்ள அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டடங்களை இடிக்கும் அதிகாரம் கரையோரா பாதுகாப்பு திணைக்கத்திற்குள்ளது. பொலிஸார் இவ்வாறான கட்டடங்களில்தலையிட்டு அது போதைப்பொருள் வியாபாரத்தின் மூலம் கட்டப்பட்டது எனத் தெரிவிப்பது சட்டத்திற்கு விரோதமானது எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (05)



# பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் சந்திப்பு

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் பதவி காலத்தை நிறைவு செய்யவுள்ள நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கேல் அப்பிள்டனுக்கும்இடையிலானசந்திப்பொன்றுசெவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்றது. நியூஸிலாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகளை வலுப்படுத்த இதுவரை காலமும் ஆற்றிய பங்களிப்புக்காக நியூஸிலாந்து-உயர் ஸ்தானிகருக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். இதனிடையே நியூஸிலாந்தில் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் நிறுவதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு நியூ ஸிலாந்து உயர்ஸ்தானிகரும் இதன்போது பிரதமருக்கு நன்றி தெரிவித்தார்.

கொவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை குறிப்பிடத்தக்க அளவு மீண்டுள்ளதாகவும் 3 வருடங்களுக்கு முன்னர் தாம் இலங்கைக்கு வருகை தந்த போது நாடு கொவிட் தொற்றால் முடக்கப்பட்டிருந்ததாகவும் அந்த சந்தர்ப்பத்தில் தாம் ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தநியூஸிலாந்துஉயர்தானிகர், தற்போதைய அரசாங்கம் நெருக்கடிகளை முறையாக முகாமைத்துவம் செய்துள்ளதாகவும் இதன் காரணமாக அதிகளவிலான சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தருவதாகவும் குறிப்பிட்டார். தாம் பதவியில் இருந்த காலப்பகுதியில் பிரதமர் தினேஷ் குணவர்தன அனைத்து சந்தர்ப்பங்களிலும் பூரண ஒத்துழைப்புகளை வழங்கினார் எனவும் இதன்போது அவர் நினைவு கூர்ந்தார்.

மேலும் இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திரத் தொடர்புகளை வலுப்படுத்தவும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை வெற்றி கொள்வதற்கும் இலங்கை முன்னெடுத்த வேலைத் திட்டங்கள் தொடர்பிலும், கடன் மறுசீரமைப்பு, வர்த்தகம், முதலீடுகள் மற்றும் தேர்தல் தொடர்பான திருத்தங்கள் சம்பந்தமாகவும் இதன் போது இருவருக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டது. (05)

# கொழும்பில் ஆசிரியை படுகொலைக்கு பின்னால் பாலியல் வல்லுறவு என கைதானவர் வாக்கு மூலம்

கொழும்பு, கறுவாத்தோட்டம்பகுதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் பெண்ணொருவர்கொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் சந்தேகநபர் தெமட்டகொட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கறுவாத் தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஜயராம மாவத்தை பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பெண் ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக கடந்த 15 ஆம் திகதி கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் ஆசிரியர் ஒருவர் எனவும் குறித்த சம்பவம் இடம்பெற்ற அன்று காலையும், பிற்பகல் வேளையிலும் சந்தேகத்துக்கிடமான நபர் ஒருவர் குறித்த வீட்டுக்கு வருகை தருவதும் அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி காட்சிகளில் பதிவாகியிருந்தன.

அதன்படி குறித்த நபர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் கொழும்பு, தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரை கைது செய்திருந்தனர்.

சந்தேகநபரிடம்மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய குறித்த பெண்ணைபாலியல்துஷ்பிரயோகத்திற்குஉட்படுத்திபின்னர்கொலைசெய்துவிட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுச் தப்பிச் சென்றனர் எனவும் வாக்கு-மூலம் அளித்துள்ளார்.

இதன்போது சந்தே நபரிடமிருந்து கையடக்கதொலைபேசி, மடிக்கணனி மற்றும் இரண்டு எரிவாயு சிலிண்டர்களும்பறிமுதல்செய்யப்பட்டதாகவும் சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கறுவாத்தோட்டம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(05)

# திருமலை 5 மாணவர் படுகொலை விவகாரம்: 18 வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை

## சர்வதேச மன்னிப்புச்சபை கடும் விசனம்

திருகோணமலை 5 மாணவர் படுகொலைச்சம்பவம்இடம்பெற்று 18வருடங்கள்பூர்த்தியடைந்துள்ள நிலையில், அதுகுறித்துஉண்மை, நீதிமற்றும்இழப்பீடுஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருப்பதாக சர்வதேசமன்னிப்புச்சபைவிசனம் வெளியிட்டுள்ளது.

செவ்வாய்கிழமையுடன் 'திரு கோணமலை 5 மாணவர் படுகொலை' இடம்பெற்று 18 வருடங்கள்பூர்த்தியடைந்துள்ளன. கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி திருகோணமலை நகரில் 5 தமிழ் மாணவர்கள் பாதுகாப்புப்படையினரால் கொல்லப்பட்டனர். இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, திருகோணமலை 5 மாணவர் படுகொலைச் சம்பவம்இடம்பெற்று18வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், அதுகுறித்து உண்மை, நீதி நிலைநாட்டப்படுவதையும், இழப்பீடு வழங்கப்படுவதையும் உறுதிசெய்வதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது. அதுமாத்திரமன்றி முக்கிய ஆதாரங்கள் இருந்தபோதிலும், அது மூடிமறைக்கப்பட்டிருப்பதாகவும் மன்னிப்புச்சபைதெரிவித்துள்ளது.(05)

# இலங்கை மின்சார துறையை தனியார் மயமாக்க ஏற்பாடு

## வசந்த சமரசிங்க தகவல்

மின்சாரத்துறை மறுசீரமைப்பு செய்வதை வரவேற்கிறோம். ஆனால் மறுசீரமைப்பு என்ற பெயரில் அரசாங்கம் மின்சார சபையைத் தனியார் மயமாக்கவே நடவடிக்கை எடுத்து வருகிறது.

தனியார்மயமாக்கல்பிரச்சினைக்குத்தீர்வுஅல்ல என ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

மின்சாரத்துறையில் தற்போதும் பாரியளவில் மாபியாக்கள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் வலுசக்தி நாட்டுக்கு மிகவும் அவசியமானதாகும்.

அதனால்நல்லசேவைஒன்றைவழங்குவதற்காக இந்தத் துறைகளில் மறுசீரமைப்பு மேற்கொள்வது அவசியமன தொன்றாகும். ஆனால் அரசாங்கம்



மறுசீரமைப்பு என்ற பேரில் மின்சாரத்துறையை தனியார்மயமாக்கவேநடவடிக்கைஎடுத்துவருகிறது. தனியார் மயமாக்குவது இடம்பெறும் ஊழல் மோசடிகளுக்கு தீர்வுகாக அமையப்போவதில்லை. - என்றார். (05)

# மது அருந்திவிட்டு வீட்டுக்கு வரவேண்டாம் எனக் கூறிய சகோதரி மீது கத்திக்குத்து

## சகோதரன் கைது

மது அருந்திவிட்டு வீட்டுக்கு வரவேண்டாம் என கூறிய சகோதரியை மரக்கறி வெட்டும் கத்தியால் குத்தி காயப்படுத்திய சகோதரன் பேருவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்பேருவளைபிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடையவராவார்.

இவர் மற்றுமொரு சகோதரனுடன் புத்தாண்டை கொண்டாடிவிட்டு, மது போதையில் காயமடைந்த சகோதரியின் வீட்டிற்கு வந்துள்ளார்.

இந்நிலையில் மது அருந்திவிட்டு வீட்டுக்கு வரவேண்டாம் என சகோதரி கூறிய நிலையில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் சந்தேக நபர் சமையல் அறையிலிருந்த மரக்கறி வெட்டும் கத்தியால் சகோதரியின் முதுகில் குத்தி காயப்படுத்தியுள்ளார். காயமடைந்தவர் தர்கா நகர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாகொடை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மின்சாரம், பெற்றோலியம் உள்ளிட்ட பலசேவைகள் அத்தியாவசியசேவை

## வர்த்தமானி வெளியீடு

பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானியின் பிரகாரம், அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ள சேவைகள் பின்வருமாறு -

1. மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள்

2. பெற்றோலிய பொருள்கள் மற்றும் எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம்.

3. ஒரு துறைமுகத்திற்குள் பிரவேசிக்கும் கப்பல்களில் இருந்து உணவு அல்லது பானம், எண்ணெய் அல்லது எரிபொருள்களைக் கொண்டு செல்லல், இறக்குதல், களஞ்சியப்படுத்தல், ஒப்படைத்தல் மற்றும் வெளியேற்றல் தொடர்பான சேவைகள்.

4. விமான நிலையங்கள், துறைமுகங்கள் உள்ளிட்ட விமான போக்குவரத்து சேவைகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான சேவைகள்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முழு ஏமாற்றம்

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நான்கு நாள் பயணமாக வடக்குக்கு வந்துள்ளார். நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அவர் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்தினார். அதன் பின்னர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த ஆண்டில் எப்படியும் அரசுத் தலைவர் தேர்தல் நடக்கவுள்ள நிலையிலும், அதற்கு மேலதிகமாக பொதுத் தேர்தலும்கூட நடக்கும் சாத்தியங்கள் உள்ள நிலையிலும் அரசுத் தலைவரின் வடக்குப் பயணத்தின்போது அரசியல் தீர்வு குறித்த அவரது கருத்துக்களுக்காகத் தமிழ் மக்கள் காத்திருந்தார்கள். குறைந்தபட்சம் தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகளான காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, வடக்குகிழக்கில் பௌத்தமயமாக்கல் மற்றும் பௌத்த ஆக்கிரமிப்பு, தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள், காணாமற்போனோர் விவரகாரம் ஆகியவற்றிலாவது உருப்படியான அறிவிப்புக்கள் வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால், நேற்றைய கூட்டத்தில் அத்தகைய எந்தவிதமான முன்னேற்றகரமான அறிவிப்புக்களும் அரசுத் தலைவரால் விடுக்கப்படவில்லை. வடக்கின் அபிவிருத்திக்கான திட்டத்தை இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாரிக்கவேண்டும் என்று அரசுத் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார். அதுவும் நாட்டின் தேசிய அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யும் விதத்தில் வடக்கின் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும்படி அவர் கேட்டுள்ளார்.

தேசிய அபிவிருத்தியில் பங்களிக்கும் வடக்கின் திட்டங்களை எப்படி வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாரிப்பார்கள் என்று தெரியவில்லை. அதற்கான வாய்ப்புக்களும் இல்லை. தேசிய உற்பத்தியில் வடக்கின் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்கான திட்டங்களைக் கொழும்புதான் தயாரிக்கமுடியும். வடக்கு அதனைத் தீர்மானிப்பதற்கான எந்தவித அதிகாரங்களையும் கொண்டிராத நிலையிலும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் வடக்கின் யோசனைகள், முன்மொழிவுகள் ஏற்கப்படக்கூடிய சூழ்நிலைகள் இல்லாத நிலையிலும் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்குக்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்மொழிவது என்பது பகல் கனவு மட்டுமே.


அந்த வகையில் பார்த்தால் அரசுத் தலைவர் விடுத்த ஒரே உருப்படியான அழைப்பும்கூட அர்த்தமற்றது. காணி மற்றும் காணாமற்போனோர் விடயத்தில் அரசுத் தலைவர் பழைய பல்லவியையே பாடிவிட்டுச் சென்றுள்ளார். அதில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. பௌத்தமயமாக்கல் குறித்தோ பௌத்த ஆக்கிரமிப்புக் குறித்தோ தொல்லியல் திணைக்கள நடவடிக்கைகள் குறித்தோ அவர் வாய்திறக்கவேயில்லை.

அரசுத் தலைவர் தேர்தல் ஒன்று நெருங்கும் நிலையில் வடக்கில் வாய்விட்டு தெற்கில் வாங்கிக்கட்டிக்கொள்ளாமல் இருப்பதில் அவர் மிகக் கவனமாக இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளமுடிகிறது. அரசியல் தீர்வு குறித்தோ அல்லது தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கோ சாதகமான அரசியல் முடிவுகளை எடுத்தால் அது தெற்கில் தனக்கிருக்கும் கொஞ்சநஞ்ச அரசியல் ஆதரவையும் பறித்துவிடும் என்று அஞ்சும் ஒரு தலைவரால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம். அதுபோன்றே அபிவிருத்தியின் பெயரால் தமிழ் மக்களின் வாக்குகளைக் கவர்ந்துவிடலாம் என்று எண்ணுவதும் முட்டாள்தனம்.

மொத்தத்தில் அரசுத் தலைவரின் யாழ்ப்பாணப் பயணத்தில் உருப்படியான எந்தவொரு விடயமும் இல்லை என்பது தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றமே!

# இருதலை கொள்ளி எறும்பு

**என். சத்திய மூர்த்தி**



நான்கு நாள் பயணமாக தற்போது வட மாகாணத்திற்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே, தென்னிலங்கை அரச தலைமைகளின் வழியில் மீண்டும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து கோடிட்டு காட்டுவார் என்று எதிர்பார்க்கலாம். யாழ்பாண பயணத்திற்கு முன்னர் தென்னிலங்கை ஊடக செவ்வி ஒன்றில், பொருளாதார பிரச்சினை மற்றும் இனப்பிரச்சினை ஆகிய இரண்டையும் நாட்டின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்குமான இரண்டு தூண்கள், அல்லது கண்கள். என்று சாரப்படும்படி அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாகவே, பொருளாதாரப் பிரச்சினைகளை அரசு எதிர்கொள்ளும் அதேவேளையில், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்ந்து பேச்சு நடத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் அடிக்கோடிட்டுக் காட்டி உள்ளார். ஆனால், இனப்பிரச்சினை குறித்த களநிலை என்ன? அல்லது, ரணிலின் முயற்சியை தமிழர் தரப்பு எவ்வாறெல்லாம் நோக்குகிறது?

தமிழர்களை பொறுத்த வரையில், ரணிலின் இந்த முயற்சியே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு- கிழக்கு வாக்குகளை தனக்கு பெற்றுக்கொள்வதற்காக மட்டுமே என்ற எண்ணமே தலைதூக்கி நிற்கிறது. தேர்தலில்



அவர் வெற்றிபெற்றால், வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிவிடும். அதிலும் குறிப்பாக அடுத்து வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில், அவர் சார்ந்த அணிக்கு தென்னிலங்கையின் ஆதரவே முக்கியமானதாக இருக்கும். எனவே. தமிழர்களுடனான ஒட்டுறவை அவர் கட் பண்ணிவிடுவார்.

காரணம், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லையென்றால், ஜனாதிபதியாக இருந்து அவர் சாதிக்கப்போவது ஒன்றுமில்லை. அவருடைய இடத்தில் வேறொருவர் இருந்தால், அவருக்கு நாட்டின் உயர் பதவியே கிடைத்தற்கரிய பேறு. அத்துடன் விட்டுவிடுவார்கள். ஆனால், தன்னை அறிவுஜீவி என்றும், உலகளாவிய இராஜதந்திரி என்றும் கருதியிருக்கும் ரணிலாருக்கு, நாட்டின் எதிர்காலத்திற்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் தனது அன்பளிப்பு அல்லது அர்பணிப்பு என்று விட்டு செல்லவேண்டிய செயல் திட்டங்கள் உள்ளன என்று உறுதியாகக் கருதுகிறார். அதில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதும் ஒரு அலகு. இன்றளவும் முக்கியமான ஓர் அலகு.

### சரித்திரத்தில் இடம்

ரணிலின் பிரச்சினையே, நூலும் நோகாமல், முள்ளும் உடையாமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதே. நாட்டின் இறையாண்மைக்கும் ஒற்றுமைக்கு இனியும் குந்தகம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற நியாயமான கருதல் ஒருபுறம். தமிழர் ஆதரவு நிலையால், தனது அரசியல் எதிர்காலம் பாழ்பட்டுவிடக்கூடாது என்பது மறுபுறம்.

இருதலை கொள்ளி எறும்பின் நிலையில் அவர் இருக்கிறார். தொண்டையில் சிக்கிக்கொண்ட எலும்பு உள்ளேயும் போகாது, வெளியிலும் எடுக்க முடியாத கண்டின். கடந்த 2020 நாடாளுமன்ற தேர்தல் பின்னடைவிற்குப் பின்னர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் அவரது எதிர்காலத்தை என்றென்றைக்கும் நிர்ணயிக்கும் வலிமை பெற்றது. அதனை அவர் உணர்ந்தே வைத்திருக்கிறார்.

ஆனால், 2019 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியாளரான கோத்தபாய ராஜபச்ச போன்று தமிழர்களை உதாசீனப்படுத்திவிட்டு, சிங்கள ஆதரவுடன் மட்டுமே வெற்றிபெறும் வழியைக் குறித்து அவர் ஆலோசித்தது இல்லை. தன்னை தென்னிலங்கை சிங்கள பேரினவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது அதற்கு ஒரு காரணம். தமிழர்களை ஒதுக்கிவிட்டு சிங்களவர்களின் வாக்குகளில் மட்டுமே ஜனாதிபதியானால், சரித்திரத்தில் தனது பெயர் களங்கப்படும் என்ற விசனம் மறுபுறம்.

### முகத்திரை

சமகாலத்தில் மற்ற தென்னிலங்கை தலைவர்களுக்கும் ரணிலுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. ராஜபக்சக்கள் போன்ற பிறர் தங்களை பேரினவாதிகளாகவே காட்டிக்கொண்டு வந்துள்ளனர். அல்லது, அவ்வாறான ஒரு இமேஜ் தோன்றினால் அதனை மாற்றிக்கொள்ள முயன்றது இல்லை. ஆனால், ரணில் மட்டுமே தன்னை ஒரு நடுநிலைவாதி என்று பிறர் கருதவேண்டும் என்று நினைத்து காய் நகர்த்துபவர். ஆனால், அது அவரது உண்மையான முகம் அல்ல என்பதாலேயே வழியில் சறுக்கி விழுகிறார். அல்லது, அவரது முகத்திரை கிழிந்துவிடுகிறது. அது போன்ற ஒரு இமேஜே ரணில் குறித்து தமிழர் மத்தியில் நிலவுகிறது.

இதற்கு ரணில் மட்டும் தானா காரணம்? இனப்போர் உச்சக்கட்டத்தில் இருந்த காலகட்டத்தில், போர் நிறுத்தம் என்ற இடைக்கால தீர்வை பிரதமர் என்ற நிலையில் ரணிலே முன்னெடுத்தார். அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு சவால்விடும் முகமாக, அவர் இது போன்ற பல்வேறு முடிவுகளை அப்போது எடுத்தார்.

அந்த விதத்தில், போர் நிறுத்தம் போன்ற மிக முக்கியமான முடிவை ஒரு ஜனாதிபதியின் முழு அறிவும் ஒப்புதலும் இல்லாமல் அவர் எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரத்தையும் பிரதமர் இல்லாமலாக்க முடியும் என்பதை அவர் நிரூபித்தார். அதற்காக, தனது அமைச்சரவையையும் நாடாளுமன்றத்தையும் சந்திரிகா அம்மையார் தனக்குண்டான அதிகாரங்கள் மூலம் கலைப்பார்



என்பதும் அவர் அறிந்த விடயமே. ஆனால், எப்போது, விடுதலை புலிகள் அமைப்பு தனக்கு போக்கு காட்டுகிறது என்று அவருக்கு உறுதியாயிற்றோ, அப்போதே தனது மறு முகத்தையும் காட்டினார். விடுதலை புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண பிரிவிற்கு தலைமை தாங்கிய 'கர்னல்' கருணாவை, பிரபாகரன் தலைமையில் இருந்து தனியாக்கினார். அதன் காரணமாகவே, பின்னர், மஹிந்தா காலத்தில், விடுதலை புலிகள் அமைப்பு முதலில் கிழக்கு மாகாணத்தையும் பின்னர் வடக்கிலும் போரில் படுதோல்வி அடைந்தது என்று கூறுவோர் உள்ளனர்.

### உறவாடி....

இது போன்றே, கடந்த நல்லாட்சி அரசு

(8ஆம் பக்கம் பார்க்க..)

# வற் வரி அதிகரிப்பால் அரசாங்கம் கல்வியை அழிக்க விரும்புகிறதா?

## இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வி

புத்தாண்டு தினத்தில் இருந்து நடைமுறைக்குவரும்வற்வரிஅதிகரிப்பின் விளைவு, அப்பியாசக் கொப்பிகள் முதல் பாடசாலை போக்குவரத்து சேவைகள் வரை பாதிப்பைஏற்படுத்துவதால், நாட்டில் கல்வி தடைப்படும் அபாயம் இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், கல்வித்துறைக்கு வரி விதிக்கவேண்டாம்எனஅனைத்து தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், அரசாங்கம் அதனைக்கருத்திற்கொள்ளாதுஇந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் கூறுகையில் -

தற்போது பாடசாலை வான் சேவையை வழங்குவோர் பெப்ரவரி மாதம் பாடசாலை ஆரம்பித்தவுடன் கட்டணத்தை அதிகரிக்கப்போவதாகத் தெளிவாக அறிவித்துள்ளனர்.

பெற்றோருக்கு சமையல் எரிவாயுவிலிருந்து கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருள்களுக்கும் 18 வீத வரியை விதித்து பிள்ளைகளின் அப்பியாசப் கொப்பிகள் முதல் அனைத்திற்கும் 18 வீத வரியை விதித்து பாதணி, முதல் புத்தகப் பை வரை வரியை விதித்து போக்குவரத்திற்கும் கட்டணத்தை அதிகரித்த பின்னர் எப்படி வாழ்வது?

அரசாங்கத்திற்கு கல்வி அமைப்பைநடத்த விரும்புகிறதா? அல்லாவிடின் இந்த நாட்டின் கல்வி முறைமையில் சாதகமற்ற நிலையிலுள்ள, எதுவும் இயலாத பிள்ளைகளின் கல்வியை அழிக்க விரும்புகிறதா?

ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வற் வரி திருத்தத்துக்கு அமைய 15 சதவீதமாக இருந்த வற் வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை வரி விதிக்கப்படாத 97 பொருள்கள் மற்றும் சேவைகளுக்கும் வற் வரி அதிகரிப்புபொருந்தும்எனநிதியமைச்சு அறிவித்துள்ளது.

11 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பிள்ளைக்கு தலா 100 ரூபா ஒதுக்கி மேற்கொள்ளப்படும் ஊட்டச்சத்து திட்டத்துக்கு வற் வரியை உயர்த்தியதால் பல சவால்கள் ஏற்பட்டுள்ளன. - என்றார். (05)

# மின்சாரம், பெற்றோலியம் உள்ளிட்ட பலசேவைகள் அத்தியாவசியசேவை

## வர்த்தமானி வெளியீடு

பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானியின் பிரகாரம், அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ள சேவைகள் பின்வரு மாறு -

1. மின்சார விநியோகம் தொடர் பான அனைத்து சேவைகள்
2. பெற்றோலிய பொருள்கள் மற்றும் எரிபொருள் வழங்கல் மற் றும் விநியோகம்.
3. ஒரு துறைமுகத்திற்குள் பிரவேசிக்கும் கப்பல்களில் இருந்து உணவு அல்லது பானம், எண்ணெய் அல்லது எரிபொருள்களைக் கொண்டு செல்லல், இறக்குதல், களஞ்சியப்படுத்தல், ஒப்படைத்தல் மற்றும் வெளியேற்றல் தொடர்பான சேவைகள்.
4. விமான நிலையங்கள், துறைமுகங்கள் உள்ளிட்ட விமான போக்குவரத்து சேவைகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான சேவைகள்.

(05)

# காலி சிறைச்சாலையின் மற்றொரு கைதியும் சாவு

காலி சிறைச்சாலையின் கைதி ஒருவர் சுகவீனம் காரணமாக கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் என். ஜி. சீ. ஐ. சந்துருவன் என்ற 28 வயதுடைய நபராவார்.

இவர் சுகவீனம் காரணமாக காலி சிறைச்சாலையின் சில கைதிகளுடன் கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் மூளைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் சந்தேகிக்கின்றனர்.

இவரது மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை நேற்று (வியாழக்கிழமை) மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து இது தொடர்பான மேலதிக விசாரணைகள் காலி பொலிஸார் மேற் கொள்கின்றனர்.

காலி சிறைச்சாலைக் கைதிகள் 3 பேர் இதுவரை மூளைக்காய்ச்சல் நோயின் தாக்கத்தால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு வருகை

நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன புதன்கிழமை மாலை 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினரை வரவேற்றதைத் தொடர்ந்து கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன கேட்டறிந்தார்.

மேலும், இச்சந்திப்பின்போது மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும், எதிர்காலத்தில் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிப்பதற்கு வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# ‘வரி எண்’ செயன்முறையை துரிதப்படுத்துவது எப்படி?

## ஐ.நா அபிவிருத்தி செயற்திட்ட அதிகாரி ஆலோசனை

’வரிஎண்’பெற்றுக்கொள்ளும்அனைவரும் வரி செலுத்துகைக்கு உட்படப்போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்துவதன் மூலமே வரி எண் பெற்றுக்கொள்ளும் செயன்முறையைத் துரிதப்படுத்தமுடியும் என ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச்செயலாளரும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியப் பணிப்பாளருமான கன்னி விக்னராஜா நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குவருகைதந்திருக்கும்ஐக்கிய நாடுகள்சபையின்உதவிபொதுச்செயலாளரும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியப் பணிப்பாளருமான கன்னி விக்னராஜாவுக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு புதன்கிழமை கொழும்பிலுள்ளநிதியமைச்சில்நடைபெற்றது.

இதன்போது வரிக்கட்டமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் அதிகளவானோரை வரி செலுத்துவதற்கு ஊக்குவித்தல் என்பவற்றுக்கு வரிசெலுத்துகைக்குள் உட்பிரவேசிப்பதற்கான செயன்முறையை இலகுபடுத்துவது அவசியம் எனவும், அதற்கு டிஜிற்றல் மயமாக்கல் இன்றியமையாதது எனவும் கன்னி விக்னராஜா சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று ’வரி எண்’ பெற்றுக்கொள்ளும் அனைவரும் வரி செலுத்துகைக்கு உட்படப்போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்துவதன் மூலமே வரி எண் பெற்றுக்கொள்ளும் செயன்முறையைத் துரிதப்படுத்தமுடியும் என்பதே சர்வதேச ரீதியில் தனக்குக் கிடைத்த அனுபவம் எனவும் அவர் எடுத்துரைத்தார்.

அதேபோன்று வரி அறவீட்டு செயன்முறையை வலுப்படுத்துவதற்கு பங்களாதேஷ் கையாளப்பட்ட உத்திகள் இலங்கைக்கு மிகமுக்கியமானவை எனவும், குறிப்பாக ஊழல் நிறைந்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அந்நாட்டின் அரச வருமானத்திணைக்களம் டிஜிற்றல் மயப்படுத்தப்பட்டமை மற்றும் மாவட்ட மட்டம் வரை விரிவுபடுத்தப்பட்டமை மூலம் செயற்திறன்மிக்க கட்டமைப்பாக மாற்றப்பட்டிருப்பதாகவும் கன்னி விக்னராஜா இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்கவிடம் தெரிவித்தார்.

குறிப்பாக மாவட்ட மட்டம் மூலம் பிரதேச மட்டம் வரையில் பரந்துபட்டிருக்கும் டிஜிற்றல் முறைமை ஊடாகவே அந்நாட்டில் வரி அறவிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதனை ஏற்றுக்கொண்ட ஹொன் சேமசிங்க, வரிக்கட்டமைப்பை டிஜிற்றல் மயப்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான இலக்காகக் காணப்படுவதாகவும், மாவட்ட செயலகங்களை அடிப்படையாகக்கொண்டு இச்செயன்முறையை விரிவுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன எனவும் குறிப்பிட்டார். அத்தோடு மிகக்கடினமான மறுசீரமைப்புக்களை முன்னெடுத்துவரும் தற்போதைய சூழ்நிலையில், எந்தவொரு தரப்பினருக்கும் விசேட சலுகைகளை வழங்கக்கூடிய வாய்ப்பு இல்லை எனவும், நாடு மீண்டும் ஸ்திரமான நிலைக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னரேயே இதில் ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்ளமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.



மேலும் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருக்கும் பெறுமதிசேர் வரி அறவீடு குறித்து சமூகத்தின் மத்தியில் தோற்றம்பெற்றிருக்கும் கருத்துக்கள் குறித்தும் இச்சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டது. (05)

## சிறுத்தைக்குப் பயந்து மரத்தில் ஏறியவர் 2 நாட்களின் பின் மீட்பு

மன்னம்பிட்டி - மாகந்தோட்டை பிரதேசத்தில் கடந்த இரண்டு நாள்களாக காணாமல்போயிருந்த ஒருவர் மரமொன்றில் இருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டவர் 66 வயதுடையவராவார்.

இவர் மாகந்தோட்டை காட்டுப் பகுதியில் விறகு வெட்டச்சென்ற போது அங்கு இருந்த சிறுத்தையிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள மரத்தின் மீது ஏறியுள்ளார்.

இந்நிலையில் அப்பகுதியில் சூழ்ந்த வெள்ளத்தால் இரண்டு நாள்களாகியும் அவர் மரத்திலேயே தங்கியிருந்துள்ளார்.

இதனையடுத்து இவர் பிரதேசவாசிகளின் உதவியுடன் காப்பாற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)



## ஆயுர்வேத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம்சுகாதாரச்செலவுகளைக் குறைக்க முடிந்தது.

பாரம்பரிய மருத்துவத்தை பாதுகாக்க விஷேட பிரிவொன்றை நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. பாரம்பரியமருத்துவத் முறைக்கு ஒரு முறையான நிறுவனம் ஸ்தாபிக்கப்படும் வரை பாரம்பரிய மருத்துவத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் இந்த விஷேட பிரிவு நிறுவப்படவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத சுதேச மருத் துவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கி, அந்த மருத்துவ முறை குறித்துஆய்வுகள்நடத்தி,முறையான கட்டமைப்பைத் தயாரிப்பதுடன், அந்தத் தொழில்துறை தொடர்பான தகவல்களைச்சேகரிக்கும் பணிகள் இதன் கீழ் இடம்பெறும்.

அது குறித்து கலந்துரையாடிய பின்னர், திறைசேரிக்கு சுமை ஏற் படாத வகையில் பாரம்பரிய மருத்துவத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு பிரிவை நிறுவுவதற்கு அங்கீகாரம் அளிக்க அமைச்சர வைக்கு பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆயுர்வேதகூட்டுத்தாபனம்சுதேச மருத்துவத் துறையில் ஆயுர்வேத சிகிச்சை மையங்களான 'பொடி மன்த்ர' (உடல் மந்திரம்) அறிமுகப் படுத்தவுள்ளது. இதுசுதேசமருத்துவத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். ஆயுர்வேத சுகாதார நிலையங்கள் மூலம் பட்டதாரி, பயிற்சி பெற்ற மசாஜ் சிகிச்சையாளர்களின் மேற்பார்வையில் உடல் நலப் பாதுகாப்பு சேவைகளை வழங்குவ தற்கானநடவடிக்கைமேற்கொள்ளப் படஉள்ளது. இதனைஉள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். உள்நாட்டில் ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களையும் இதற்காக பதிவு செய்ய அழைக்கிறோம். இது தொடர்பான பத்திரிகை விளம்பரம் இம்மாதம்10ஆம்திகதிவெளியாகும்.

இந்த ஆண்டு இறுதிக்குள், சுதேச மருந்துகளின் உற்பத்தி மற்றும் உள்நாட்டு மூலிகைச் செடிகளின் விளைச்சலை வணிக ரீதியிலான தொழிதுறையாக தரம் உயர்த்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது வரை வாழ்வாதார அளவில் இருந்தஇச்செயற்பாட்டை, இனிமேல் வணிக அளவில் மேற்கொள்ள தயாராக உள்ளோம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

தென்பகுதியில் மழை காலநிலைக்கு ஏற்ப நெல் பயிரிடப் படுகிறது. இந்நிலையில் அந்த விளைச்சலை, ஒன்று அல்லது இரண்டு போகங்கள் மாத்திரமே அறுவடை செய்யலாம். ஆனால் நெல்பயிர்ச்செய்கைக்குஇணையாக திப்பிலியையும் பயிரிடலாம். இரண் டும் ஒரே தட்பவெப்பநிலை மற்றும் காலநிலை நிலைமைளுக்கு ஏற்ப இருந்தாலும் கூட திப்பிலியை நான்கு போகங்களுக்கு அறுவடை செய்யலாம்

ஒரு கிலோகிராம் நெல் 150 அல்லது 200 ரூபாவாகவும், திப்பிலி ஒருகிலோகிராம்9000ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. எனவே, பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைகளுக்குப் பதிலாக வணிகப் பயிர்ச்செய்கையில் கவனம் செலுத் தத்தயாராகஉள்ளோம்என்பதையும் குறிப்பிட வேண்டும். சுதேச மருத்தவத்திற்குஅவசியமானமூலப் பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்திசெய்வதும்நமது மற்றொரு குறிக்கோளாகும்.

ஆரோக்கியமான குழந்தைகள் திட்டம்' மூலம் சுதேச மருத்துவத் துறையில்ஈடுபட்டுள்ளஅரசஊழியர் களின் பிள்ளைகளுக்கு ஆரோக்கிய மான மற்றும் மேம்பட்ட கல்வியை வழங்க நாங்கள் எதிர்பார்க்கின் றோம். ஆயுர்வேத சபைகளை வலுப்படுத்துவதும் நமது மற்றொரு நோக்கமாகும். இன்னும் சில மாதங் களில் சுதேசமருந்து உற்பத்தியாளர் கள் மற்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் 'ஜனாதிபதிதங்கவிருதுகள்'வழங்கும் நிகழ்ச்சியை நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# அதிகாரத்திற்காக மக்களை அடமானம் வைக்கக்கூடாது

## நளின் பண்டார கூறுகிறார்

அதிகாரத்தைப் பெறுவதற்காக மக்களை அடமானம் வைக்க கூடாதென நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில்நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே நளின் பண்டார இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தனியொருவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. நாட்டின் தலைவராக வருபவர் சரியான பொருளாதார மற்றும் நிர்வாகப் பார்வையைக் கொண்டிருக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய விருந்த பல முக்கிய அரசியல் தலைவர்களின் பெயர்களை கட்சி நிராகரித்துள்ளது.

ஊழல்வாதிகள் அற்ற மற்றும் இன மத வாதங்கள் இல்லாதவர்களே இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி உருவாக்கும் அரசாங்கத்தில் நியாயமற்ற வரிக் கொள்கை திருத்தப்படும்.



மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தாத வரிக் கொள்கையை அமுல்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி அரசாங்கத்தின் ஊடாகச் செயற்படும்.

நாட்டையும் மக்களையும் வங்குரோத்தாக்கிய குழுவினரைப் பாதுகாக்கும் பக்க பலமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாறியுள்ளார். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து சேகரிப்பு

சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து பெறும் நடவடிக்கை வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். நல்லை ஆதீனத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சமய தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கையெழுத்துப் பிரதிகள் வடக்கிற்கு வருகை தந்துள்ள ஜனாதிபதிக்கு நேரில் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

### தனிநபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவ உதவி பெற வேண்டிய நடுத்தர மக்கள் ஜனாதிபதி நிதியில் இருந்து மருத்துவ உதவி பெற முடியும்.

2023ஆம் ஆண்டிலும் மக்களுக்கான விரைவான மற்றும் விரிவான சேவைகளை வழங்குவதற்கு ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதி நிதியம் செயற்பட்டதாக அதன் செயலாளர் சரத் குமார தெரிவித்தார்.

2022ஆகஸ்ட் முதல் பணம் செலுத்தாமல் குவிந்துள்ள 8,000க்கும் மேற்பட்ட மருத்துவ உதவி விண்ணப்பங்கள் உட்பட, அந்த ஆண்டின் இறுதிக்குள், சுமார்12,000 மருத்துவ உதவி விண்ணப்பங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 1,342 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டிற்கு, 3458 மருத்துவ உதவி விண்ணப்பங்கள் பெறப்பட்டதோடு அந்த விண்ணப்பங்கள் அனைத்திற்கும் பணம் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. அதற்காக செலுத்தப்பட்ட தொகை 844.7 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

அதேபோல்2022ஆம்ஆண்டில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்திபெற்றாலும் உயர்கல்வியை தொடர்பவதற்கான நிவாரணம் தேவைப்படும் மாணவர்களுக்காக கல்விப் பிரிவொன்றுக்கு 30 பேர் என்ற அடிப்படையில் நாடளாவிய ரீதியில் 100 கல்விப் பிரிவுகளை சேர்ந்த மாணவர்களுக்கு 24 மாதங்களுக்கு5000கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

அதற்கமைய அனைத்து மாதங்களிலும் பணிகளை ஆரம்பிக்கும் முதல் இரு தினங்களுக்குள் மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் பணம் வைப்புச் செய்து அவர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். தற்போது இந்த மாணவர்களுக்காக 10 மாதாந்தத்தவணை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் இம்முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்றிருந்தாலும் உயர்கல்வியை தொடர்வதில் பொருளாதார நெருக்கடிகளைஎதிர்கொண்டிருக்கும் மாணவர்களுக்காக 50கல்விப் பிரிவொன்றுக்கு 50பேர் என்ற அடிப்படையில் 100 கல்விப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 5000 மாணவர்களுக்கு 24 மாதங்களுக்கு 6000ரூபா கொடுப்பனவை மாதாந்தம் வழங்கும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ஜனாதிபதி நிதியத்தினால் க.பொ.த பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கல்வியைதொடர்வதற்குநிவாரணம் வழங்கப்பட வேண்டியவர்களுக்கு புலமைப்பரிசில்வழங்கும்வேலைத் திட்டம் ஒன்றும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, கடந்த இரண்டு ஆண்டுகளில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள், மாவட்ட அளவிலும்,தேசியஅளவிலும்தெரிவு செய்யப்பட்டு,அந்தமாணவர்களுக்கு நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 90 மாணவர்களுக்கு 31.5 மில்லியன் ரூபாநிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

வறுமையில் வாடும் ஆனால் சுயதொழில் செய்யக் கூடிய குடும்பங்களைமேம்படுத்துவதற்காக பிரதேச செயலாளர்கள் ஊடாக நிதி மற்றும் பொருளுதவி வழங்கும் வேலைத்திட்டமும் ஜனாதிபதி நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

வறுமையில் வாடும் ஆனால் சுயதொழில் அல்லது பிற வேலைகளைச் செய்ய முடியாத குடும்பங்களைஅடையாளம்காண, பிராந்திய செயலகங்கள் மூலம் மாதாந்தம் நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்குவதற்கான திட்டங்கள் 2023 இல் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. சமய நல்லிணக்கத்தைப்பேணுவதற்கும் சமய நடவடிக்கைகள் மற்றும் ஏனையசமூகநடவடிக்கைகளுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மருத்துவ உதவித்தொகையைசெலுத்துவதில் ஏற்படும் தேவையற்ற காலதாமதத்தைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறைபாடுகள் இல்லாமல் பூர்த்தி செய்யப்பட்டு ஜனாதிபதி நிதியத்திற்கு ஒப்படைக்கப்படும் விண்ணப்பப்படிவத்திற்கு மூன்று வேலை நாட்களுக்குள் பணத்தை செலுத்தத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அறுவைசிகிச்சைஃசிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்நோயாளிகளுக்குஉத்தரவாதச் சான்றிதழ்கள் சில மணி நேரங்களுக்குள்வழங்கஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. அதன்படி, நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ வசதிகளைப் பெற்று மருத்துவ மனையை விட்டு வெளியேறும் போது, மருத்துவமனைகளுக்கு அந்த நிதியத்தால் செலுத்த ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையை மருத்துவக் கட்டணத்தில் இருந்து குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, இந்த பணிகளை நிறைவேற்ற நோயாளி/விண்ணப்பதாரர் ஒருமுறை மட்டும் ஜனாதிபதி நிதியத்திற்கு வருகை தந்தால் போதும் எனவும், எந்தவொரு விண்ணப்பதாரரும் தேவையில்லாமல் நிதியத்திற்கு அழைக்கப்படவோ அல்லது அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படவோ மாட்டார்கள் எனவும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத் குமார மேலும் தெரிவித்தார்.

### பீடித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையை மறுசீரமைப்புச் செய்தல், சரியான முறையொன்றின் கீழ் மீண்டும் அதனை தயாரிப்பதற்கான அவசியம் மற்றும் மூலப்பொருட்களை சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்வதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், இறக்குமதியாளர்கள் மற்றும் பீடி உற்பத்தி நிறுவனங்கள் வருடாந்தம் பதிவு செய்யப்படுவது தொடர்பிலான இணக்கப்பாடுகளும் இதன்போது எட்டப்பட்டதோடு, பதிவுக் கட்டணத் திருத்தம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

வெட்டி தயாரிக்கப்படும் ஈரமான இலைகள் இறக்குமதியை தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறும், தொழிற்சாலைகளை சார்ந்து காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உரிய சட்ட கட்டமைப்பொன்றை தயாரிக்குமாறும் இதன்போது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள் சிலரும் இதன்போது கலந்துகொண்டனர்.

### ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் இடம்பெற்றது. ரணில் விக்கிரமசிங்கவின் இன அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்ததாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்தது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே, நல்லிணக்க நாடகம் போடாதே, தென்க் கோனை கைது செய், மக்களின் வாழ்க்கையினை அழிக்காதே, கைதுசெய்தவர்களை விடுதலை செய், ஜனநாயக போராட்டத்தினை தடுத்துநிறுத்தாதே என்று போராட்டக்காரர்கள் முழக்கமிட்டனர்.

பழைய பூங்கா அருகில் பொலிஸார் ஏற்படுத்தியிருந்த வீதித் தடைகள் முன்பாக போராட்டக்காரர்கள் குழுமியிருந்து ஜனாதிபதிக்கு எதிராக முழக்கமிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் குறிப்பிட்டளவு மக்களே கலந்துகொண்டனர். எனினும் மாவட்டச் செயலகத்தைச் சுற்றி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகம் சுற்றியுள்ள பகுதிகள் வீதிகளில் வீதித்தடைகள் போடப்பட்டு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் கலகமடக்கும் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

மாவட்டச்செயலகவளாகத்துக்கு வெளியே நீர்த்தாரை பிரயோகிக்கும் வாகனமும் நிறுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை ஜனாதிபதிக்கு எதிரான ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பேருந்தில் ஏற்றப்பட்டுகொண்டுசெல்லப்பட்டனர்.

வீதித்தடைகளை மீறி முன்னேறுவதற்கு முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ், மக்கள் முன்னணிக் கட்சியின் உறுப்பினர்களாகிய பொன் மாஸ்டர், இளைஞர் அணித்தலைவர் சத்தியசீலன், அருண் மதி, விஜயமோகன் ஆகியோர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

வாக்குமூலம்பெறப்பட்டபின்னர் அவர்கள் நால்வரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

உலங்கு வானூர்தி மூலம் யாழ். நகவரை வந்தடைந்த ஜனாதிபதி இடைஞ்சல் ஏதுமின்றி அங்கிருந்த வாகனம் மூலம் மாவட்டச் செயலகத்திற்கு வருகை தந்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்தினார்.

### உண்மைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளது. அந்த வகையில், தற்போது அதற்கான சட்ட வரைவுகளை தயாரித்தல்,அதனைவர்த்தமானியில் அறிவித்துசட்டமியற்றுதல்உள்ளிட்ட செயற்பாடுகளை அடுத்த கட்டமாக முன்னெடுக்கவுள்ளது.

அதற்கு முன்னதாக உண்மைக்கும் நீதிக்கும் நல்லிணக்கத்துமான அலுவலகத்திற்கானபொறிமுறையை ஸ்தாபிப்பதற்கு முன்னதாக பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்பினரின் கருத்துக்களை கேட்டறிந்து கொள்வதற்கு நடவடிக்கைளை எடுத்துள்ளோம். அதனடிப்படையில் தான் நாம் திருகோணமலைக்கு விஜயம் செய்துபல்வேறுபட்டதரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளோம் என்றார்.

### ரணிலுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளவுபடுத்தியிருந்தார். அவரது தரப்பு வாதத்தைக் கேட்ட நீதிமன்றம் போராட்டங்களுக்குத் தடை விதிக்க முடியாது என்று பொலஸாரின் கோரிக்கையை நிராகரித்தது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# பாடல் பெற்ற ஈழத்து திருத்தலங்கள்

தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம் என்பது 63 நாயன்மார்களுள் பிரபல்யமான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரமூரத்திநாயனாரால் அத்திருத்தலங்களுக்குச் சென்று அத்திருத்தல இறைவனைப் புகழ்ந்து பாடப்பட்டவையாகும். அந்த வரிசையில் 274 திருத்தலங்கள் பாடல் பெற்றவையாகும். எமது ஈழத்தில் (இலங்ஷ்கியல்) இரண்டு ஆலயங்கள் சிறப்பிடம் வகிக்கின்றன. அவையாவன திருக்கோணேச்சரம் மற்றும் திருக்கேதீச்சரம் ஆகும்.

தற்போது திருக்கோணேச்சரத்தை எடுத்து நோக்குவோமானால் கிழக்கு மாகாணத்தின் தலைநகரான திருகோணமலையில் அமைந்துள்ளது. உலகிலேயே புகழ்பெற்ற இவ்வாயலமானது இலங்கையை ஆட்சி செய்த 'மனு மாணிக்கராசா' என்பவரால் கட்டப்பட்டது. திருக்கோணேஸ்வர ஆலயமானது திருஞானசம்பந்தரால் பதிகம் பாடப்பெற்றுள்ளது.

இவ்வாயலயத்தின் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன சிறப்புவாய்ந்தன ஆகும். இங்கு இறைவனாக கோணேச்சரநாதரும் இறைவியாகமாதுமையம்மாளும்இணைந்து





அருள்புரிகின்றனர். இவ்வாலயத்தின் தீர்த்தம் பாவநாசம் என அழைக்கப்படுகிறது. பாவநாசம் என்பதன் பொருள் பாவங்களைக் கழுவித் தீர்க்கவல்லது. திருக்கோணேச்சரத்தின் தலவிருட்சம் கல்லால மரம் ஆகும்.

திருக்கோணேச்சர ஆலயத்தின் பூசைமுறையானது ஆகம நெறிக்குட்பட்டதாகும். இக்கோயிலின் மகோற்சவமானது பங்குனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பதினெட்டு நாட்கள் திருவிழா இடம்பெறுதின்றது. கோணேச்சர ஆலயத்தின் மூல விக்கிரகம் நகர உலா வருவது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு சிவராத்திரி விரதமானது வெகுவிமர்சை யாக அனு;டிக்கப்படுகிறது. கி.பி 1964ம் ஆண்டு போர்த்துக்கேயத் தளபதி 'கொண்டைன் டீசை' என்பவர் தலைமையில் இக்கோயிலினுள்ளே குருமார் போல்போர்த்துக் கேயர் வேடம் தரித்துச் சென்று சொத்துக்களைக் கொள்ளையிட்டதுடன் கோயிலை அழித்தனர். இவ்வாறு அழிக்கப்பட்ட கற்களைக் கொண்டு திருகோணமலைக் கோட்டையை அமைத்தனர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேச்சர ஆலயத்திலுள்ள கல்வெட்டானது போர்த்துக்கேயரால் சிதைவுக்குட்பட்டிருந்து போது சிலர் அவ்வெற்றிடைத்தைநிரப்பமுயற்சிசெய்தனர். அப்போது 'குளக்கோட்டன் முன்னே.....' எனும் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது. அதில் பின்வரும் விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**'குளக்கோட்டன் முன்னே**
**திருப்பணி செய்திட**
**பிளந்த பயிரை**
**பூணைக்கண் புகைக்கண்**
**செங்கண பின்**
**தனை வியந்திடும் உலகு'**

அதாவது குளக்கோட்டனே திருப்பணி செய்தான் என்றும், கந்தளாய்க் குளத்தையும் கோட்டத்தையும் அமைத்ததால் இயற்பெயர் மறைந்து குளக்கோட்டன் என அழைக்கப்படுகின்றான். மற்றும் கயசின்னம் பொறிக்கப்பட்டு திருக்கோணேச்சரத்தின் தொன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து திருகோணமலையிலுள்ள பெரியோர்களால் தற்காலத்தில் புனரமைக்கப்பட்ட நிலையிலுள்ளது. தற்போது அமையப்பெற்றுள்ள திருக்கோணேச்சரர் ஆலயம் முன்னைய ஆலயத்திலும் பார்க்க ஒப்பீட்டளவில் சிறிதாகவும் நேர்த்தியாகவும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டவாறு திருக்கோணேச்சரர் ஆலயத்தின் தொன்மையும் சிறப்பும் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

அடுத்து ஈழத்தில் பிரசித்தி பெற்ற திருக் கேதீச்சரத்தை எடுத்து நோக்குவோமானால் இலங்கையின் (ஈழத்தின்) மேற்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. இது மன்னார் மாவட்டத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகரமான மாதோட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயமானது திருஞானசம்பந்தர். திரு நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் அருணகிரி நாதரால் திருப்புகழிலும் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது.

இங்கு இறைவனாக கேதீச்சரநாதரும் இறைவியாகக் கௌரி அம்பாளும் இணைந்து அருள் புரிகின்றனர். இவ்வாலயத்தின் தீர்த்தம் பாலாவியாகும்.

இ;வ்வாயலத்திற்கு கேது என்ற கிரகம் வழிபட்டமையாலேயே தான் கேதீச்சரம் எனப் பெயர் பெற்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இக்கோயிலை பழங்குடியினர் ஆகிய நாகர்கள் தமது வழிபாட்டுத் தலமாகக் கருதுவதால் நாகநாதர் என கோயில் என அழைக்கப்படுகின்றது. சோழ, பாண்டிய மன்னர்கள் இங்கு அருந்தொண்டு ஆற்றிய பெருமை திருக்கேதீச்சர ஆலயத்தைப் பறைசாற்றுகின்றது.

சூரபதுமனனின் மனைவியாரின் பேரன் தனது பிள்ளைப் பேற்றுப் பெறுவதற்காக பாலாவித்தீர்த்ததில்நீராடிவழிபட்டார். அப்போது அவருக்குப் பிள்ளைப் பேறு கிடைத்தது. இப்புனித தீர்த்தத்தில் நீராடுபவர்கள் தமது பாவ புண்ணியங்களைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

இவ்வாறு திருக்கேதீச்சரத்தின் தொன்மை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனும் வாக்கிற்கிணங்க சைவ சமயிகளாகிய நாம் இறைவனை வழிபட்டு நல்லவர்களாவும் வல்லவர்களாகவும் வாழ்வோமாக.

**பு.மதுசாளினி**
**தரம் - 10, யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை**

# சக்தி வழிபாடு



சிவன் இல்லை என்றால் சக்தி இல்லை என்பதை நாமறிவோம் அதே நேரம் சக்தி இல்லாவிட்டால் சிவன் தொழிற்படாது என்பது உண்மை. இறைவன் இச்சக்தியினால் உயிர்களுக்கு அருள் புரிய விரும்புகின்றான். சக்தி என்றால் என்ன? சக்திக்கும் சிவத்திற்கும் இடையே என்ன தொடர்பு என்பதை விளக்குவதே இந்து மதம் இவ்வுலகம் யாவும் சக்தி மயமானது.சக்தி பல்வேறு தொழில்களை ஆற்றவும் தத்தவங்களை விளக்கவும் பல்வேறு வடிவங்கள் எடுக்கிறாள் முத்தொழில்களைஆற்றும்போதுபிரம்மானிஇ வைஸ்ணவிஇ உருத்திராணி எனப்பெயர் பெறுகின்றாள்.சிவனிற்கு ஒப்படும் போது துர்க்கையாகவும் தீமையை அழிக்கும் போது காளியுமாகிறாள். வித்தைஇ கல்வி என வடிவமெடுக்கும் போது சரஸ்வதியாகவும் தனதானிய செல்வமென வடிவமெடுக்கும் இலக்குமி எனவும் அழைக்கப்பெறுகின்றாள்;

அவதார புருசர்களாக சித்தர்களாக தோன்றியோர் கூட சக்தியை வழிபட்டு வந்தனர். இராமன் இலங்கை செல்ல முன் துர்க்கை பூசை செய்ததாகவும் கண்ணன்

காத்தாயினி பூஜை செய்ததாகவும் சங்கராச்சியார் சாரதா பூஜை செய்ததாகவும் இராமகிருஸ்ணர் காளியை வழிபட்டதாகவும் நாமறிந்த செய்தியாகும். ஜகதாம்பா உணவழிக்கும்அன்னபூரணிஅனைத்துக்கும் மேலான இராஜேஸ்வரிஇமகாசக்திபேராற்றல் மிக்கவள் என பல்வேறு பெயர்களால் சக்தி போற்றப்படுகிறாள்

சக்தியை நோக்கி பல்வேறு விரதங்கள் அனுஸ்டிக்கப்படுகின்றன. அவற்றுள் கல்வி செல்வம் வீரம் அருள் வேண்டி நவராத்திரி விரதம் எம்மால் பயபக்தியுடன் அனுஸ்டிக்கப்படுகின்றது. சிவனுக்கு சமமான நிலையில் சக்தி அமையும் போது அது பராசக்தி எனப்படுகின்றது. பிற சமயங்களின் செல்வாக்கினாலும் சக்திக்கு தனி உரிமை கொடுக்கவேண்டியநிலைக்குதள்ளப்பட்டாலும் புராணங்களின் செல்வாக்கினாலும் சாக்தம் என்ற சைவ மதப்பிரிவு உருவாகியது.

பெண்ணிற்கு முதன்மை இடம் வழங்கும் சைவ மதப்பிரிவே சாக்தம் ஆகும் அம்பாள் வழிபாட்டில் மிக முக்கியமானது கோடுகளாலான யந்திர வழிபாடாகும். சக்தி வழிபாட்டில் இதனை சிறீசக்கர பூசை என்பார்.கரப்பா மற்றும் குப்தர் காலங்களிற்கிடையில் சக்தி வழிபாடு கருத்தூன்றி இருந்ததே வர சிறப்பான வளர்ச்சி பெறவில்லை. சக்தி என்று கருத்து மக்களிடையே கருத்தூன்றி இருந்தது. இதற்கு ஆதரிக்குமாற் போல் இருக்கு வேதம் துணைநிற்கின்றது.

சக்தியை இயக்குசக்தி இஇயங்குசக்தி என வகைப்படுத்தலாம். இயக்கு சக்தியை உடைய தெய்வம் சூரியன் ஆகும். சூரியனின்தாயாகஉஷையும் துணையாக அக்கினியும் காணப்படுகின்றது.

வேத காலத்திலிருந்தே சக்தி வழிபாடு இடம்பெற்று வந்தது. இந்நிலையில் தான் ஆகமங்கள் தோன்றின. ஆகமங்கள் உருவம் அமைத்து வழிபாடு செய்வதை ஊக்குவித்தன. உருவம் அமைக்கும் போது சக்திக்கான இடப்பக்கத்தை வரையறுக்க தவறவில்லை. அர்த்தநாதீஸ்வரர் வடிவம் சக்திக்கு சமபங்கம் கொடுத்ததை முன்வைக்கின்றது. கேதார கௌரி விரதம் அனுஸ்டித்து சக்தி சிவனுடன் இணைந்திருக்கும் பேற்றை பெற்றாள். சிவனிற்கு 27 ஆகமங்கள் உண்டு.அவை சக்தியால் அருளப்பட்டதாக கருதப்படுகின்றது.

பராசக்தியாக அம்மன் அறக்கருணை மூலமும் மறக்கருணை மூலமும் அருள் செய்யவல்லவள்.அதாவது அன்பின் மூலமும் தண்டித்தல் மூலமும் அருள் செய்வாள். இனி நாம் சக்தியின் அவதாரங்களை நோக்கினால்மாரியம்மன்இகௌரிமனோன்மணிஇகாளிஇ திரௌபதிஇ கண்ணகிஇமகமாரி எனப்பல்வேறு அவதாரங்கள் சக்திக்குண்டு. சிவன் இபிரம்மாஇவிஸ்னு ஆகிய மூவரின் பேரொலியிலிருந்து தோன்றியதாக புராணங்கள் கூறுகின்றன மார்க்கண்டேயர் புராணம்இதிருமந்திரம்இஅபிராமி அந்தாதி ஆகியன சக்தியை போற்றி பாடப்படுகின்றன. சக்தியை வழிபட்டு மேன்மையடைந்தோர் பல. ஆகவே நாமும் சக்தியைப்போற்றி மேன்மை அடைவோமாக.

**மோ.அஸ்வினி**
9A, யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி

காலைக்கதிர் Kalaikkathir

# மன்னாரில் நீராலும் உணவாலும் நோய்த்தொற்று பரவும் அபாயம்

## வைத்தியர் த.விநோதன் எச்சரிக்கை



மன்னாரில் திண்ம கழிவகற்றல் பிரச்சினைக்கு விரைவில் ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்படாவிட்டால் மன்னார் மாவட்டத்தில் டெங்கு பரவல் அதிகரிக்கலாம் என்பதுடன் நீர் மற்றும் உணவுகள் ஊடாகப் பரவும் நோய்த்தொற்றும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகமொன்றுக்கு கருத்துத்; தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

மன்னார் நகர சபையின் திண்மக் கழிவகற்றல் செயற்பாடு தற்போது ஒழுங்கான முறையில் இடம்பெறாமையால் மன்னார் நகர் பகுதி பாரியதொரு சுகாதார சீர்கேட்டு நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

மக்கள் திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளும்போது சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபை எல்லைக்குள் காணப்படும் வைத்தியசாலைகளிலும் திண்மக் கழிவகற்றல் செயன்முறை முற்றாக முடங்கியுள்ளது.

நகர் புறங்களிலும், பொது இடங்களிலும் அதேவேளை வைத்தியசாலை சூழலிலும் மருத்துவக் கழிவுகள் அல்லாத ஏனைய கழிவுகள் சூழ்ந்து காணப்படுகின்றது.

தற்போது மழை காலம் என்பதால் நோய்க் கிருமிகளின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக, டெங்கு நுளம்புகளின் பரவல் அதிகமாகக் காணப்படுகிறது.

வயிற்றோட்டம், வாந்திபேதி போன்ற நோய்களும் மழை காலத்தில் அதிகமாகப் பரவுவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. மன்னார் நகர் பகுதியில் தேங்கியிருக்கும் இந்த திண்மக் கழிவுகள் இவ்வாறான கிருமித் தொற்று பரவலுக்கு ஏதுவாக அமைகிறது. அத்துடன், மன்னார் பொது வைத்தியசாலை சூழலிலும் கழிவுகள் மற்றும் புற்கள் உட்பட பல இடங்களில் நீர் தேங்கியுள்ளது. ஆனாலும் மன்னார் வைத்தியசாலை சுத்தப்படுத்தலுக்கு போதிய ஆளணியினர் இன்மையால் இந்தப் பிரச்சினை நீடித்து வருகிறது.

எனவே மன்னார் மக்களின் ஆரோக்கியத்தில் அக்கறையுள்ள பொது மக்கள், நலன் விரும்பிகள் வைத்தியசாலை சூழலை சுத்தப்படுத்த உதவிகளை வழங்க முன்வருவதோடு, குழுக்களாகவும் தனி நபர்களாகவும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு தங்களுடைய உதவியை வழங்க வேண்டும்.

சுகாதாரப் பணி உதவியாளர்கள் 85 பேர் மன்னார் வைத்தியசாலையில் பற்றாக்குறையாகக் காணப்படுகின்ற நிலையில், ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள 10 நபர்களே குறித்த சுத்தப்படுத்தல் பணிகளை மன்னார் வைத்தியசாலை சூழலில் மேற்கொண்டு வருகின்றனர் என அவர் தெரிவித்தார். (05)

# ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. சஜித்துடன் இணைந்தார்



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாஷிரித்த திசேரா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்து அவரது வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார்.

இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் நாத்தாண்டி தேர்தல் தொகுதியின் அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

இவர் பல சந்தர்ப்பங்களில் பல அமைச்சரவை மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளை வகித்தவராவார். (05)

# கடலாமை இறைச்சியை வைத்திருந்தவர் கைது

சட்டவிரோதமாக கடலாமை இறைச்சியை வைத்திருந்த 54 வயதுடைய நபர் ஒருவர் யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியில் வைத்து நேற்று (வியாழக்கிழமை) சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 14 கிலோ 800 கிராம் எடையுடைய கடலாமை இறைச்சி மீட்கப்பட்டது.

கைதான நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சந்தேகத்துக்கிடமாக இறந்த நபரின் சடலம் கண்டு பிடிப்பு

கோனாபொல கும்புக்க பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த நபரின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோனாபொல கும்புக்க பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய திருமணமாகாத சுபாசிங்க மொரவக ஆராச்சிகே கிருல சானக என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வீட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனப் பொலிஸ் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. (05)

# யுக்திய நடவடிக்கையில் சந்தேகநபர்கள் பட்டியலில் பெயரிடப்பட்ட 84 பேரும் கைது

யுக்திய நடவடிக்கையின்போது புதன்கிழமை நள்ளிரவு 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 1,038 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 67 பேர் தொடர்பில் தடுப்புக்காவல் உத்தரவுக்கு அமைய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. போதைக்கு அடிமையான 43 பேர் புனர்வாழ்வுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து 417 கிராம் ஹெரோயின், 205 கிராம் ஐஸ் மற்றும் 722 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகத்தின் பதிவு செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் உள்ள 84 சந்தேக நபர்கள் இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# இலங்கையில் இதுவரை இல்லாதளவில் 2023இல் யானைகள் அதிகம் உயிரிழப்பு

இலங்கை சுதந்திரமடைந்த பிறகு இதுவரை இல்லாத வகையில் கடந்த 2023 ஆம் ஆண்டு 474 யானைகள் உயிரிழந்துள்ளன.

கடந்த பல வருடங்களாகவே இலங்கையில் தொடர்ச்சியாகவே யானைகளின் இறப்பு அதிகரித்து வருகிறது. இந்த எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டு 439 என்றளவில் இருந்தது. அதற்கு முந்தைய ஆண்டு 375 யானைகள் உயிரிழந்தன. இந்த உயிரிழப்புகளில் மூன்றில் ஒரு பங்கு, யானைகளுக்கும் மனிதர்களுக்கும் உருவாகும் மோதல்கள் காரணமாகவே ஏற்படுகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மையத்தின் திமுது சந்தருவான் சேனாதீர இது தொடர்பில் கூறுகையில் -

சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியைப் பார்க்கும்போது, அதிகளவிலான யானைகள் இறப்பு பதிவாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 74 யானைகள் உயிரிழந்துள்ளன. ஆனால், அவை எப்படி இறந்தன என்பது பற்றி தகவல் இல்லை.

49 யானைகள் துப்பாக்கிச் சூட்டின் மூலமும் 36 யானைகள் மின்சாரம் தாக்கியும் பலியாகின.

விரைவான நகரமயமாக்கல் மற்றும் யானைகளின் வாழ்விடங்களை மனிதர்கள் ஆக்கிரமித்தமை, அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு உணவளிக்கவேண்டிய கட்டாயம் காரணமாக விவசாயத்துக்காக காடுகளை அழித்தமை ஆகியவையே உலகளவில் யானைகளின் அழிவுக்கு முக்கிய காரணங்களாக உள்ளன.

யானைகள் மற்றும் மனிதர்களுக்கு இடையே ஏற்படும் மோதல்களை தடுக்க அரசு போதிய நடவடிக்கை எடுக்கவில்லை.

அரசியல் தலைமைகளும் அதிகாரிகளும் என்ன செய்கிறார்கள் என்றால் யானைகளை ஒருங்கிணைத்து அவற்றை ஒரு பகுதிக்குள் தள்ளி பிறகு மின்வேலி அமைக்கிறார். ஆனால், அதற்கு அப்பாற்பட்டு அவர்களால் எந்தத் தீர்வையும் அளிக்க முடியவில்லை.

சுற்றுச்சூழல் சிறப்பாக இருப்பதற்கு யானைகளை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதேவேளை இப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வினை காண்பது சுலபமான காரியமல்ல.

யானைகள்-மனிதர்களுக்கு இடையேயான மோதல்களுக்கு நிரந்தர தீர்வு காண்பது கடினம் என்றாலும், யானைகளைப் பாதுகாக்க இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பது மிகவும் அவசியமானது என வலியுறுத்தினார். (05)

# இருதலை கொள்ளி எறும்பு.........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

காலத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் கீழ் பிரதமராக இருந்த ரணில், தானே அரசு என்ற வகையிலேயே செயலாற்றினார். அதன் அடிப்படையிலேயே, அன்று சக்தி வாய்ந்த அமைப்பாக இருந்த தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமையுடன் தொடர்ந்து ஒட்டுறவாடி வந்தார்.

ரணில் ஒரு இராஜதந்திரி அல்லர். அவ்வாறாவதற்கு அவருக்கு எந்தவித தகுதியும் எண்ணமும் இல்லை என்றே வைத்துக்கொள்வோம். அவர் ஒரு சாதாரண அரசியல்வாதி மட்டுமே என்பதைக்கூட ஏற்றுக்கொள்வோம். ஆனால், அவரை தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடியது யார்? இன்று உடைந்து கிடக்கும் கூட்டமைப்பின் அந்த நாள் சம்மந்தன் தலைமைதானே? நல்லாட்சி நிர்வாகத்தின் கீழ் புதிய அரசமைப்புத் தயார் செய்வதில், ரணிலோடு கைகோர்த்து நின்றது யார்? கூட்டமைப்பின் சுமந்திரன்தானே. அவருக்கு, சம்மந்தனின் ஆசிர்வாதமும் பிற உறுப்பு கட்சிகளின் ஆதரவும் இருந்ததுதானே.

அன்றைய காலகட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும், நாடாளுமன்றத்தில் பட்ஜெட் பாஸ் ஆவதற்கு கூட்டமைப்பின் வாக்குகள் தேவை என்ற நிர்பந்த நிலையில், ரணிலிடமிருந்து மைத்திரியிடமோ, வெறும் ஒரு வாக்குறுதியைக்கூட கூட்டமைப்பினர் கேட்டுப் பெறவில்லை. அதைவிட முக்கியமாக, 2018 முடிவில் ஜனாதிபதி மைத்திரி பிரதமர் ரணிலை பதவி நீக்கம் செய்தபோதும், பின்னர் உச்ச நீதிமன்றம் அவரை மீண்டும் பதவியில் அமர்த்தியபோதும், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, ரணிலுக்கு கூட்டமைப்பின் ஆதரவு நாடாளுமன்றத்தில் தேவையாக இருந்தது. ஆனால் நடந்தது என்ன?

பத்திரிகையாளர் கேள்விகளுக்கு பதிலளித்த சம்மந்தன், நாட்டில் ஜனநாயகத்திற்கு ஆபத்து வந்திருந்த அந்தவேளையில், கூட்டமைப்பு கீழ்தர அரசியலில் இறங்காது என்றும், எந்தவித நிபந்தனைகளும் எதிர்பார்ப்புகளும் இன்றி, ரணிலை ஆதரிப்போம் என்றும் திரும்பி, திரும்பி அறிவித்தார்.

**பனிப்போர்**

அதற்கு பின்னர், அவர்கள் ரணிலிடம் இருந்து எதுவும் எதிர்பார்த்திருக்கக்கூடாது. ஆனால் எதிர்பார்த்தார்கள். ஏமாற்றம் அடைந்தார்கள். தற்போதைய ரணில்-சுமந்திரன் பனிப்போர், கடந்த கால நிகழ்வுகளின் தொடர்ச்சியே. அரசியல்வாதியாக, ரணில் எதையும் கடந்து போகிறார். சுமந்திரனால் அவ்வாறு செய்ய முடியவில்லை. ஆனால், இன்று, சம்மந்தன் -சுமந்திரன் பங்குவகிக்கும் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக கூட்டமைப்பில் இருந்து வெளியேறி தனியாக புதிய கூட்டணியை உருவாக்கி இருக்கும் அங்கத்துவ கட்சிகள், ஏன் நல்லாட்சி அரசு காலத்தில் வாய்பேசா மௌனிகளாக இருந்தார்கள்?

இன்று ரணிலின் அழைப்பை மறுத்து அவருடன் பேச்சு தவிர்த்த விக்னேஸ்வரன் ஏன் சில மாதங்கள் முன்வரையிலும் அவர் விரித்த வலையில் விழுந்திருந்தார்? ஏன், எப்போதும் தனியாவர்தனம் வாசிக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அவ்வப்போது, சஜித் பிரேமதாசாவுடன் காணப்படுகிறார்?

இந்த கேள்விகளின் விடைகளில்தான் தமிழர்களின் எதிர்காலம் அடங்கி உள்ளது. ரணில் கையில் மட்டும் அல்ல. ஆனால். அவற்றின் பின் புதைந்திருக்கும் சூழ்மாதி தந்திரங்களை தமிழர் தரப்புச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. பிரித்தானிய கொலனி ஆதிக்க காலம் தொடங்கித் தங்களை அதிபுத்திசாலிகளாகவும் சிங்களவர்களை முட்டாள்களாகவும் பாவித்து அரசியல் செய்துவந்துள்ள தமிழர் தரப்பு, ஆமை- முயல் பந்தயத்தில் தொடர்ந்து தோற்றுவந்துள்ளது.

அதனை ஏற்றுக்கொள்ளவும் மறுக்கிறது. அவ்வாறு தோல்வியை ஏற்றுக்கொண்டால் மட்டுமே, அடுத்த சுற்றிலாவது சரியான முடிவுகளை எடுக்க முடியும் என்றும் அவர்கள் எண்ணுவதில்லை. அந்த விதத்தில் எப்போது இனப்போர் முடிந்த காலகட்டத்தில் அன்றைய மஹிந்தா அரசுடனான பேச்சுக்களை மேலை நாடுகளை திருப்திப்படுத்துவதற்காக கூட்டமைப்பு முறித்துக்கொண்டதோ, அன்றே இனப்பிரச்சினைக்கான அமைதி தீர்வுத் திட்டமும் இல்லாமல் ஆகிவிட்டது.

அன்று போர் வெற்றியை தொடர்ந்து மஹிந்தாவை கொண்டாடிய தென்னிலங்கை அவர் எது செய்தாலும் சரி என்று நினைத்தது. ஆனால், அதுவே ஐந்து ஆண்டுகள் கழிந்து 2015 ஜனாதிபதி தேர்தல் வரை நிலைக்கவில்லை. அதன் பின்னர் பேச்சு ஒன்று, வார்த்தை பிறிதொன்று என்ற வகையிலேயே, தென்னிலங்கை அரச தலைமைகள் செயல்பட்டு வருகின்றன. அதுவே நிதர்சனமும்கூட.


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# சிறிதரன், சுமந்திரன் இருவருமே ஒற்றுமையை விரும்பாதவர்கள்

## விந்தன் கனகரட்ணம் சாடுகிறார்




தமிழரசுக்கட்சியின்தலைமைவேட்பாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சிறிதரன் இருவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை விரும்பாதவர்கள் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினரும் ரெலோவின் நிதிச் செயலாளருமான விந்தன் கனகரட்னம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தமிழரசுக் கட்சியுடைய தலைவராக யார் வந்தால் ஒற்றுமையுடன் செயற்படலாம் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழரசுக் கட்சியின் தலைவர் யார் என்பது அவர்களுடைய கட்சி தீர்மானித்துக் கொள்ளட்டும். ஆனால் இவர்கள் இருவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு எதிராகச் செயற்பட்டவர்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொடரில் நான் அதிகம் கூற வேண்டிய தேவையில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் 2018 பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவிப்பின் போது மூன்று பிரதேச சபைகளில் சக காட்சிகளுக்கு ஆசனம் வழங்க மறுத்து விட்டார்.

தான்தான் கிளிநொச்சி நாட்டாமை என நினைத்து தனது ஆதரவாளர்களையே வேட்பாளராக்க வேண்டும். சகா தமிழ் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என நினைப்பவர் எவ்வாறு ஒற்றுமையை விரும்புவார்?

தமிழரசு கட்சியின் தற்போதைய தலைவராக இருக்கும் மாவை சேனாதிராசா உண்மையிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பாக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என விரும்புபவர்.

அவர் தமிழரசுக் கட்சியின் தலைவராக இருக்கும் நிலையில் எத்தனையோ விடயங்களில் அவருக்கு எதிராக அவருக்குத் தெரியாமல் பல செயல்பாடுகளை இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் செய்தவர்கள்.

நாங்கள் தமிழ் மக்களுக்காக அரசியல் செய்கிறவர்கள். மக்களின் விருப்பங்களுக்கு மாறாகவும் எமது கொள்கைகளுக்கு புறம்பாகவும் செயற்படக்கூடாது.

உதாரணமாக கூறின் தமிழ் மக்களின் தீர்வாக அமையாத 13 ஆவது திருத்தத்தை கூட சிங்கள தலைமைகள் வழங்கக் கூடாது என்பதில் ஒற்றுமையாக நிற்கிறார்கள்.

தமிழ் மக்களுக்காக அரசியல் செய்கிறோம் என கூறும் சக தமிழ் கட்சிகள் குறுகிய அரசியல் நோக்கத்திற்காக செயற்படும் நிலையில் இது எம்மை தெற்கு கையாள்வதற்கு ஏற்றதாக அமைகிறது.

ஆகவே தமிழரசு கட்சியின் உடைய தலைவர் யார் என்பதற்கு அப்பால் சக தமிழ் கட்சிகளுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பாக தமிழ் மக்களின் குரலாக ஒளிப்பவர்கள் தான் தலைமை பதவியில் இருக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# விசேட டெங்கு தடுப்பு வாரம்: சுகாதார அமைச்சு தீர்மானம்

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் விசேட டெங்குத் தடுப்பு வாரத்தைப் பிரகடனப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போதுள்ள டெங்கு அபாயத்தைக் கருத்திற் கொண்டு நாடளாவியரீதியில் டெங்குத்தடுப்பு வாரத்தை பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர், விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால தலைமையில் சுகாதார அமைச்சில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது பொலிஸ் மற்றும் முப்படைகளின் தலைவர்கள், டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

மாவட்ட மட்டத்தில் வியாழக்கிழமை முதல் டெங்கு ஒழிப்புக் குழுக்களை ஸ்தாபிக்கவும் எதிர்வரும் 07 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் 88,398 டெங்கு நோயாளர்கள் பதிவாகியதோடு 58 இறப்புகள் பதிவாகியுள்ளதாக டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

71 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை அதிக ஆபத்து வலயங்களாக அடையாளப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேநேரம் தற்போது அடையாளம் காணப்படும் நோயாளர்களை விட சமூகமட்டத்தில் பல நோயாளர்கள் இருக்கலாம் என்றும் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (05)

# இடைநிறுத்தப்பட்ட சுற்றுலா வலயங்கள் மீள அபிவிருத்தி

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



இடைநிறுத்தப்பட்ட சுற்றுலா வலயங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்ட சிகிரியா, தம்புள்ளை மற்றும் திருகோணமலையை சுற்றுலா வலயங்களாக அபிவிருத்தி செய்யும் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிலையான நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம், கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டுக்கு பாரிய வருமானத்தை ஈட்ட முடியும் என எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் மொத்த செலவு 1045 மில்லியன் ரூபா எனவும், 320 மில்லியன் ரூபா இந்த வருடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாத் துறைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், தொல்பொருள் நினைவுச்சின்னங்களைப் பாதுகாத்தல், பொருளாதார அபிவிருத்தி மற்றும் வருமானம் ஈட்டுதல் என்பதோடு சூழல் முகாமைத்துவம் போன்றவை குறித்த திட்டத்தின் இலக்கு எனவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.(05)

# வரி செலுத்தாமல் நாட்டுக்கு கொண்டுவந்த கைத்தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன

வீதித் தடையைப் பயன்படுத்தி வாகனங்களைச் சோதனையிட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கையடக்கத் தொலைபேசி மோசடிகள் தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளனர்.

புதன்கிழமை காலை பேலியகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நீர்கொழும்பு-கொழும்பு வீதியில் வீதித் தடையைப் பயன்படுத்தி வாகனங்கள் சோதனையிடப்பட்டன.

இதன்போது சந்தேகத்துக்கிடமான வகையில் காணப்பட்ட வான் ஒன்றைச் சோதனையிட்டபோது, வானுக்குள் ஏராளமான கைத்தொலைபேசிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

வானில் இருந்த இருவரிடம் விசாரணை நடத்தியதில், இந்த கையடக்கத் தொலைபேசிகள் வரி செலுத்தப்படாமல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது தெரிய வந்துள்ளது.

பயன்படுத்தப்படாத 246 கையடக்கத் தொலைபேசிகளும், வெளிநாடுகளில் பயன்படுத்தப்பட்ட 77 கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டு பேலியகொட பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (05)

# 27 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வர்த்தகர் ஒருவர் கைது

27 லட்சத்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவந்த வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவர் பிலியந்தலை பிரதேசத்தை சேர்ந்த 48 வயதுடைய வர்த்தகராவார்.

இவர் வியாழக்கிழமை அதிகாலை 04.51 மணியளவில் ஓமான் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

விமான நிலைய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யபப்ட்டுள்ளார்.

விசாரணையில் இவர் கொண்டு வந்த 3 பயணப்பொதிகளில் இருந்தும் 27,120 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 135 சிகரெட் பெட்டிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வரிக்குப் பதிவு செய்வது அவசியம் தண்டம் அறவிடுவது சட்டவிரோதம்

## ரெலோ ஊடகப் பேச்சாளர் சுரேன் தெரிவிப்பு

18 வயதுக்கு மேற்பட்ட வற்வரிக்கு விண்ணப்பம் செய்யாதவர்களுக்கு தண்டப்பணம் அறவிட முடியாது என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இம்மாதம் ஜனவரி மாதம் முதல் 18 வயசுக்கு மேற்பட்டவர்கள் வரி செலுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தமது பெயர்களைக் கட்டாயம் பதிவுசெய்ய வேண்டும் என அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரி செலுத்துவதற்காகப் பதிவுசெய்யப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடையம் ஆனால் பதிவு செய்யாவிட்டால் தண்ட பணம் அறவிடப்படும் என்பது சட்டவிரோதம். ஏனெனில் இலங்கையில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட மாத வருமானத்தைப் பெறுபவர்கள் கட்டாயம் வரி செலுத்த வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் 18 வயதுக்கு மேற்பட்ட எல்லோரும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களாகக் கருத முடியாது.

வறுமைக்கோட்டுக்கு உற்பட்டவர்கள் வரி செலுத்த முடியாது. அவர்களின் வருமாணம் அதிகரிக்கும் போது வரி செலுத்த முடியும் பதிவு செய்யவில்லை எனத் தண்டம் அறவிட முடியாது.

அதுமட்டுமல்லாது 18 வயசுக்குமேற்பட்டவர்கள் வருமான வரிக்காக பதிவு செய்யாவிட்டால் 50 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்படும் என அறிவித்த அரசாங்கம் இவ்வளவு காலமும் வரி வருமானம் செலுத்தாதவர்களுக்கு என்னதண்டம் என அறிவிக்கவில்லை.

ஆகவே, இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருமான வரிக்காக பதிவுசெய்வது கட்டாயமாக்குவது நல்ல விடயம் ஆனால் பதிவு செய்யாவிட்டால் 50 ஆயிரம் ரூபா தண்டம் எனக் கூறுகின்றமை சட்ட விரோதம் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை நீக்கவேண்டும்

## கரு ஜயசூரிய வலியுறுத்து

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான கோரிக்கையை, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ள வேட்பாளர்கள் இதனை மேற்கொள்வதாக உறுதியளிப்பார்கள் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டுள்ளார்.

கடந்த காலத் தலைவர்களும் அரசாங்கங்களும் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளை அரசியல் காரணங்களுக்காக முறியடித்தன.

இந்தநிலையில், சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் நம்பிக்கை இல்லாத வரையில் இலங்கை ஒரு நாடாக முன்னேற முடியாது. தேசியப் பிரச்சினைக்கு அரசியல் மூலம் மட்டும் தீர்வு காண முடியாது. ஏனெனில் பல்வேறு எதிர்ப்புத் தாக்கங்கள் இருக்கும்.

முன்னதாக 2000 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கி புதிய அரசமைப்பை உருவாக்க முயற்சித்தார். இது ஒரு மதிப்புமிக்க முன்மொழிவாக இருந்தது.

ஆனால் அரசியல் காரணங்களால் அதை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. உண்மையில், அந்த நேரத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியே சந்திரிக்கா குமாரதுங்கவின் நடவடிக்கையை எதிர்த்தது.

அத்துடன் நாடாளுமன்றத்தில் அரசமைப்பு வரைவின் நகலை எரித்த செயற்பாட்டிலும் ஈடுபட்டது.

இந்தநிலையில் நல்லாட்சி அரசாங்க நாள்களில், புதிய அரசமைப்பை நிறுவுவதற்கும் அதன்படி செயற்படுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதுவும் குறுகிய அரசியல் மற்றும் இனவாதக் கண்ணோட்டங்களால் தோல்வியடைந்தது. -என அவர் மேலும் குறிப்பிட்டார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.01.2024இல் வெளியிடப்பெற்றது.